# பிரதமருடன் ஆர். ஜி. பேச்சுவார்த்தை

## இலங்கரத்ன தகவல்

கொழும்பு, ஞாயிறு ஆர். ஜி. சேனநாயகாவும், முதியான்சே தென்னகூனும் பிரதம மந்திரி திரு டட்லி சேனநாயகாவுடன் அவரது தனிப்பட்ட வாசஸ்தலமான 'வூட்லண்ட்ஸ்' மாளிகையில் ரகசியப் பேச்சு வார்த்தைகள் நடத்தியதாகத் தமக்கு நம்பகமான தகவல் கிடைத்திருப்பதாக கொலன்னுவ எம். பி. திரு. ரி. பி. இலங்கரத்ன இன்று நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பார்லிமெண்ட் குழுக் கூட்டத்தில் தெரிவித்தார்.

கூட்டத்துக்கு திருமதி சிறிமா பண்டாரநாயகா தலைமை வகித்தார். நேற்று நடைபெற்ற இச்சந்திப்பின் போது அரசாங்கத்துக்கு ஆதரவளிப்பது குறித்து இவர் பிரதமருடன் பேசியிருப்பதாகக் கூறப்படுகிறது என்று திரு. இலங்கரத்ன தெரிவித்தார்.

பார்லிமெண்டில் அரசாங்க அங்கத்தவர்கள் அனைவரும் சிங்களத்திலேயே பேசவேண்டும் என்றும், அரசாங்கக்கருமங்கள் யாவும் சிங்களத்தில் நடைபெற வேண்டும் என்றும் அவர்கள் அரசாங்கத்தை ஆத

[8-ம் பக்கம் பார்க்க]

Registered as a Newspaper in Ceylon ★ ★ விலை சதம் 10

# ஈழநாடு

EELANADU

தபால்பெட்டி எண். 49
போன் 389

National Tamil Daily

மலர் 10
இதழ் 58
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் பிலவங்க பங்குனி 26 முஹறம் 9 திங்கட்கிழமை (8-4-68)

# "கலவரம் வேண்டாம்; கணவர் இலட்சியத்தை காப்பாற்றுக!"

## நீக்ரோ மக்களுக்கு திருமதி கிங் கோரிக்கை

வாஷிங்டன், ஏப்ரல் 7 "நீக்ரோ மக்கள் சுதந்திரமடையவேண்டும். போர் இல்லாத ஒருநாள் உருவாக வேண்டும். இதுதான் என் மறைந்த கணவரின் கனவும் லட்சியமும். இதற்காகத் தான் அவர் தன் வாழ்வையே தியாகம்செய்தார். அவரது லட்சியமும் கனவும் நிறைவேற அவரது கொள்கையைப் பின்பற்றுபவர்கள் தொடர்ந்து உழைக்கவேண்டும்' என்று இரண்டு தினங்களுக்குமுன் சுட்டுக்கொலைப்பட்ட 39 வயதான அமெரிக்க நீக்ரோ தலைவர் டாக்டர் மார்டின் லூதர் கிங்கின் மனைவி திருமதி கொறட்டாவை இன்று கேட்டுக்கொண்டார்.

கணவர் சுட்டுக்கொலைப் பட்டபின்னர் முதல் தடவையாக அவர் நிருபர்களுக்குப் பேட்டியளித்தார். நிருபர்கள் மத்தியில், மிகவும் சோகமான சூழ்நிலையில் திருமதி கொறெட்டாவை பேசினர்.

'கலவரம் என்பதே கணவருக்குப் பிடிக்காத ஒன்று. அவர் மறைவைத் தொடர்ந்து அவருக்குப் பிடிக்காத ஒன்று நடப்பது வேதனையளிப்பதாகவும், இந்தச் செய்கைகள் அவர் லட்சியத்தை அவமதிப்பதாக அமையுமென்றும் திருமதி மார்ட்டின் லூதர் கிங் கூறினர்.

### இதுவரை 20 பேர் பலி

வாஷிங்டனில் மார்ட்டின் லூதர் கிங்கின் மரணத்தைத் தொடர்ந்து மூண்ட இனக்கலவரத்தில்இதுவரை 20 பேர் பலியாகியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இவர்களில் 17 பேர் நீக்ரோக்களாம்.

கலவரங்கள் நிலவிய அமெரிக்க நகரங்கள் பலவற்றிலும் இன்று அமைதி திரும்பிக் கொண்டிருந்தது.

(8-ம் பக்கம் பார்க்க)

## 'கண்ணீர் வடிக்கிறேன்' என்கிறார் திருமதி கென்னடி

வாஷிங்டன். ஏப். 7 'திருமதி கிங்குக்காகவும் அவரது குழந்தைகளுக்காகவும் நான் கண்ணீர் வடிக்கின்றேன். அன்பையும் நம்பிக்கையையும் உலகத்துக்குப் போதித்த ஒருமனிதரை துவேஷச்செயல் பலிவாங்கி விட்டதே என்பதற்காகவும் கண்ணீர் வடிக்கின்றேன். வாளால் வாழ நினைத்தால் முடிவும் வாளாலேயே முடியும் என்பதை எமது நாடு எப்பொழுதுதான் அறிந்து கொள்வப் போகின்றதோ? அன்புக்காக தமது உயிரை அர்ப்பணித்த அந்த மனிதரின் வாழ்வு நமக்கு வழிகாட்டியாக இருக்கவேண்டும். பிறர் மீது வெறுப்புக் காட்டுவதே கொலைக்குச் சமானமானது. அவரது இதயத்தை எல்லோரும் அறிந்து அன்புக்கும் நீதிக்கும்மேலும் இடம் அளிக்கவேண்டுமென நான் பிரார்த்திக்கின்றேன். திரு. கிங் எந்த நோக்கத்துக்காக தமது உயிரை அர்ப்பணித்தாரோ அந்த நோக்கம் ஈடேறவேண்டும்.

இவ்வாறு காலம்சென்றஜனாதிபதி திரு. கென்னடியின் மனைவியான திருமதி கென்னடி தெரிவித்துள்ளார்.

### தந்தையின் வேண்டுகோள்

வாஷிங்டன், ஏப். 7 தமது மகனின் அகிம்சை வழியைத் தொடர்ந்தும் கடைப்பிடித்து வருவதற்கு தாம் தம்மாலான சகல உதவியையும் செய்வதாகக்காலஞ்சென்ற நீக்ரோத் தலைவர் டாக்டர் மார்ட்டின் லூதர் கிங்கின் தந்தை பாஸ்டர் கிங் ஜனாதிபதி ஜோன்சனுக்குத் தந்தி ஒன்றின் மூலம் தெரிவித்துள்ளார்.

கிங் அன்பு வழியிலிருந்து பிறளாதபடி இருக்குமாறு அவரது தந்தை சகலரையும் வேண்டிக் கொண்டிருக்கிறார்.

## வடபகுதி அசைஸ்விசாரணை

# கொடிகாமம் கொலைவழக்கு; எதிரி விடுதலை

யாழ்ப்பாணம், ஞாயிறு கொடிகாமம் கொலைவழக்கில் எதிரியான சண்முகம் வல்லிபுரம் விடுதலைசெய்யப்பட்டார். இவ்வழக்கு வடபகுதி அசைஸ்கோர்ட்டில் நீதியரசர் டாக்டர் ஏச். டபிள்யூ. தம்பையா கியூ. ஸி. முன்னிலையில் விசாரணைசெய்யப்பட்டது.

இவ்வழக்கில் கொடிகாமத்தில் 67ம் ஆண்டு, ஆகஸ்ட் மாதம் 17ந் தேதி கணபதி நாகமுத்துவைக் கொலைசெய்ததாக சண்முகம் வல்லிபுரம்மீது குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது.

எதிரி சார்பில் அட்வகேட் எஸ். நாகராஜா புறக்டர்களான வி. செல்லத்தம்பி, ஏ. அன்ரனி ஆகியோரின் அனுசரணையுடன் ஆஜரானார். எதிரிக்காக அரசாங்கத்தால் புறக்டர் சிற்றம்பலம் நியமிக்கப்பட்டிருந்தார்.

டாக்டர் ஏ. ரி. நல்லையா டாக்டர் ஆர். சுரேந்திரகுமார் ஆகியோரும் சாட்சியமளித்தனர்.

நேற்றுக் காலை நீதியரசர் தொகுப்புரை நிகழ்த்தியதைத் தொடர்ந்து ஜூரி சபையினர் மந்திராலோசனைசெய்த பின், எதிரி சுற்றவாளியென ஏகமனதாகத் தீர்ப்பளித்தனர். இதைத் தொடர்ந்து நீதியரசர் எதிரியை விடுதலைசெய்தார்.

அசைஸ் விசாரணை இன்று காலை நடைபெறும்.

# வல்வை இளைஞன்கொலைவழக்கு

## இம்மாதம் 11-ம் தேதி தீர்ப்பு

வல்வெட்டித்துறை, ஞாயிறு காலஞ்சென்ற சிவஞானசுந்தரம் எனது மகனாவார். கடந்த வருடம் ஏப்ரல் மாதம் 9-ந் திகதி யாழ்ப்பாணம் சட்ட வைத்திய அதிகாரிக்கு இறந்தவரின் சடலத்தை அடையாளம் காட்டினேன். அவரை ஞானம் என்றும் சொல்லி அழைப்பதுண்டு என வல்வெட்டித்துறையைச் சேர்ந்த வியாபாரியும் காலஞ்சென்றவரின் தந்தையுமான வைத்திலிங்கம் இராமசாமிப்பிள்ளை என்பவர் பருத்தித்துறை மாஜிஸ்டிரேட் திரு. கே. விக்னராசா முன்னிலையில் சாட்சியமளிக்கையில் மேற்கண்டவாறு கூறினர்.

இவ்வழக்கில் வல்வெட்டித்துறையைச் சேர்ந்த ஆர். சிவஞானசுந்தரம் என்ற இளைஞனை கடந்த வருடம் ஏப்ரல் மாதம் 8-ந் திகதி யாழ்ப்பாணம் பொலிஸ்நிலைய சார்ஜண்டு கே. இராசரத்தினம், கிளிநொச்சி பொலிஸ்நிலையம்

## கட்டுரைப் போட்டி முடிவுகள்

கொழும்பு, ஞாயிறு 50-வது ஆண்டு புரட்சி விழாவையொட்டி இலங்கை சோவியத் நட்புறவு கழகம் நடாத்திய கட்டுரைப் போட்டிமுடிவுகள்வருமாறு:

1-ம் பரிசு: கு. சந்திரகோபால் [வல்வெட்டி], 2-ம் பரிசு: கண்ணையா [கற்றன்], 3-ம் பரிசு: தனேந்திரராஜா [கந்தரோடை]. டி. சில்வா, யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையம் எம். இச

(5-ம் பக்கம் பார்க்க)

# பார்லிமெண்ட் கூட்டத்தொடர் விரைவில் ஒத்திவைக்கப்படும்?

கொழும்பு, ஞாயிறு பார்லிமெண்டின் இப்போதைய கூட்டத்தொடர் விரைவில் கலைக்கப்படுமென்றும் இதற்குள் மாவட்டசபை மசோதா சமர்ப்பிக்கப்பட மாட்டாதென்றும், அரசியல் வட்டாரங்களில் கூறப்படுகிறது.

அரசாங்க பார்லிமெண்டரி குழுகூட்டத்தில் இன்னும் மாவட்டசபை மசோதா சமர்ப்பிக்கப்படுப் பரிசீலனை செய்யப்படவில்லையென்றும் இதுவே இந்த மசோதா பார்லிமெண்டின் இப்போதைய கூட்டத் தொடரில் கொண்டு வரப்படமாட்டாதென்பதற்குக் காரணம்என்றும் கூறப்படுகிறது.

# வியட்னும் பேச்சுகளை இலங்கையில் நடத்தலாம்

## பிரதமர் டட்லி கருத்து

கொழும்பு, ஞாயிறு வியட்னும் போர் நிறுத்தம் சம்பந்தமான பேச்சுவார்த்தைகளை இலங்கையில் நடத்துவதற்கு வசதிகள் செய்ய இலங்கை அரசாங்கம் தயாராய் இருப்பதாகப்பிரதம மந்திரி திரு. டட்லி சேனநயகா இன்று பிரதிநிதிகள்சபையில் தெரிவித்தார்.

இதே கருத்தை கடந்த வருடம்ஏப்ரல் மாதம் தாம் வெளியிட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

வியட்னுமில் சம்பந்தப்பட்டுள்ள மூன்று தரப்பினரும் வெளியார் தலையீடு இல்லாமல் கூடி பேச்சுகள் ஆரம்பிக்கவேண்டும் என்பதே தமது கருத்து என்

[8-ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "பெயருக்காக நூல்களை வெளியிடக் கூடாது"

சுழிபுரம், ஞாயிறு

"சமய அறிவை வளர்க்கவும், சமயக்கருத்தை இளையோர் மனதில் பதிய வைக்கவும் சமய நூல்கள் வெளியாக வேண்டும். கூட்டுப் பிரார்த்தனை ஒவ்வோர் மனிதனையும் எவ்வாறு பக்குவப்படுத்துகின்றது என்பதை இன்று வெளியாகும் கூட்டுப் பிரார்த்தனை நூல் மூலம் அறிய முடிகின்றது. நூல்கள் பெயருக்காக மட்டும் வெளியாகாது, எல்லோரும் நற்பயன் பெறக்கூடியவகையில் வெளியாகவேண்டும்".

இவ்வாறு வழக்கம்பரை சன சமூக நிலையத்தினரால் வெளியீடு செய்யப்பட்ட "கூட்டுப்பிரார்த்தனையின் மகிமை" என்னும் நூலை வெளியிட்டு வைத்துப் பேசுகையில் ஆசிரியர் திரு. க. சீனிவாசகம் குறிப்பிட்டார்.

விழாவுக்கு நிலையச் செயலாளர் திரு. க. வாமதேவன் தலைமை வகித்தார். தலைவர் க. வாமதேவன் தலைமையுரையில், பல்வேறு கஷ்டங்களுக்கு மத்தியில் சமய நூல்களை வெளியிடும் சமய ஸ்தாபனங்களுக்கு, பொது மக்கள் பலவகைகளில் உதவி செய்ய முன்வர வேண்டும் என்றார்.

திரு. சி. வெங்கடாசலபதி நன்றியுரை கூறினார்.

REGAL JAFFNA
Daily at 10-30, 4-45, 7-00, & 9-45 p.m.
THE GREAT TRAIN ROBBERY
[crime thriller depicting the recent London Train Robbery]

106-வது தினம்!
ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 3-30, 6-30, 9-30
போயாதினங்களில் 4 காட்சி
எம்.ஜி.ஆர். - ஜெயலலிதா நடித்த
காவல்காரன்

MANOHARA
JAFFNA
Daily at
4-45, 7-00 & 9-45 p.m.
GREGORY PECK
in
MIRAGE

## ஜி. ஜி. யின் உபகாரம்

உடுவில், ஞாயிறு

உடுவில் இராமநாதன் இசைக் கல்லூரியில் கல்வி பயிலும் வறுமைப்பட்ட பிள்ளைகளுக்கு ஏற்படும் செலவினைப் போக்கிக் கொள்ளுவதற்கான உபகாரப் பண நிதிக்கு யாழ்ப்பாணம் எம். பி. திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் 500 ரூபா வழங்கியுள்ளார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற இராமநாதன் இசைக் கல்லூரி பெற்றோர் தினவிழாவிலும், கலாநிதி நடேசன் ஞாபகார்த்த நூல் நிலையத் திறப்பு விழாவிலும் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட திரு. ஜி. ஜி பொன்னம்பலம், இராமநாதன் இசைக்கல்லூரியைச் சென்று பார்வையிட்டார்.

இசைக் கல்லூரி செயலாளரால் விடுக்கப்பட்ட வேண்டுகோளைத் தொடர்ந்து, இக் கல்லூரியில் பயிற்சி பெறும் ஏழைப் பிள்ளைகளின் நலன் கருதி ஏற்படுத்தப்பட்ட உபகார நிதிக்கு திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் 500 ரூபா வழங்கினார்.

## இன்றைய பலன்

பங்குனி மீ 26 உ
[8-4-68]
திங்கள்

திதி- தசமி மாலை 5-57 மேல் ஏகாசி
நட்சத்திரம்- ஆயிலியம் இரவு 2-14 மேல்
ராகுகாலம்- 7-37—9-07

சுபநேரம்-12-07--1-37

இன்று பிறந்தவர்களுக்கு- இவ்வாண்டு மேடுபள்ளமும் நிரம்பியதாகவே காணப்படுகின்றது. பொருளாதார நெருக்கடி தலைதூக்கக் கூடும். குடும்பத்தில் சிறுதொல்லை தோன்றி மறையும். தொழில் விடயத்தில் அதிக கவனம் செலுத்தவும். பெரியோர்களுடன் பகைத்துக் கொள்ள வேண்டாம்.

மேஷம்- தொழில் பெருமை தொல்லைகள் பறக்கும்.
ரிஷபம்- நிதிவசதி, நேர்மையில் நாட்டம்.
மிதுனம்- டணம் பறிபோகும், பாதுகாப்பு நன்று
கடகம்- அடிசறுக்கும், ஆணவத்தை அடக்கு.
சிம்மம்- திடீர் திருப்பம், திரவிய இலாபம்
கன்னி- சிந்தனை மிகுதி சகோதர சஞ்சலம்
துலாம்- மாதுருவழி மகிழ்ச்சி, மாண்புடன் வாழ்தல்
விருச்சிகம்- புத்திரசுகம் புதிய பாதை
தனுசு-எதிரிபகை, ஏக்க மிகுதி
மகரம்- இருமனம் கலக்கும், இனிமை பிறக்கும்
கும்பம்- நண்பரால் தொல்லை, பொருட் செலவு
மீனம்- மனமாற்றமுண்டு, மகிழ்ச்சியும் கிடைக்கும்.

— சோதிடக்கலாநிதி —
திருமலை வேலுப்பிள்ளை

## அராலி பஸ் பிரயாணிகள் சங்க தீர்மானம்

அராலி, ஞாயிறு

அராலி பஸ் பிரயாணிகள் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம் திரு. இ. நாகலிங்கம் தலைமையில் கூடியது. அராலி - கட்டுவன் பகிரங்க வேலைப்பகுதியில் பஸ்கள் மிகவும் ஒடுக்கமான பாதையில் செல்கின்றனவென்றும் எதிரே செல்லும் வண்டிகளைக் கடக்கும் போது ஆழமான வயல்களில் சரிந்துவிழக்கூடிய பேராபத்திற்குள்ளாகின்றனவென்றும் பகிரங்க வேலைப்பகுதியினர் இதனை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கோரும் தீர்மானமொன்றை நிறைவேற்றினர்.

யாழ். பிராந்திய முகாமையாளர் 789-ம் இலக்க மார்க்கத்திற்கு மூன்று பஸ்கள் சேவையிலீடுபட நேரசூசிகை தயாரித்திருப்பது ஒரு கண்துடைப்பென்றும் சில நாட்களில் ஒரு பஸ் தானும் ஓடுவதில்லையென்றும், இந்த நிலைமை பற்றி பிராந்திய முகாமையாளரைப் பேட்டி காணவேண்டுமென்றும் இன்னொரு தீர்மானமும் நிறைவேற்றப்பட்டன.

புதுவருட உத்தியோகத் [illegible] நடை

# இந்துமாமன்ற உபசபைகள்

மருதனார்மடம், ஞாயிறு

திரு. ஸ்ரீஸ்கந்தராஜாவின் தலைமையில் இந்து மகா சபையின் கூட்டம் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்றது. சபையின் 100 அங்கத்தவர்களையும் வெவ்வேறு உபசபைகள் அமைத்து, அவர்களுக்குத் தகுந்த பொறுப்புகளை விடவேண்டுமென இக்கூட்டத்தில் முடிவுசெய்யப்பட்டது. இப்படி அமைக்கப்பட்ட உப சபைகளும் அவற்றின் அங்கத்தவர்களும் வருமாறு:

குருகுலச்சபை: தலைவர்- ச. சோமசுந்தரம், காரியதரிசி- சி. கந்தையா, மு. பசுபதி, திருமதி சி. தம்பையா, மு.செ.கந்தையா, வி. அல்லிராசா, சி. சரவணமுத்துசாமியார்.

சோலைவரி, வருமானவரி: தலைவர்- ஸ்ரீஸ்கந்தராஜா, காரியதரிசி- சி. அம்பலவாணர், சி. கந்தசாமி, சிவசுப்பிரமணியம், ச. சோமசுந்தரம், கா. ஆ. நவத்துரை.

கல்வி, கலாச்சாரம்: மு வயிரவப்பிள்ளை, சி. லக்சுமணர், வே. சங்கரலிங்கம், தி. மாணிக்கவாசகர், ஆ. கந்தையா, சி கந்தசாமி, ஆ தில்லைநாதன்.

சமயப் பிரசாரம்: இராசநாயகம், அருள் தியாகராஜா, சு. சிவசுப்பிரமணியம், சி. கதிரவேலு, மூ. சிவராசா.

நிதி திரட்டல்: தலைவர்: கோ ஆழ்வாப்பிள்ளை, செயலாளர்: மு. கந்தையா, க. சி. தங்கராசா, செ. ஞானப்பிரகாசம், ச. த. சின்னத்துரை.

ஆலயப் பிரவேசம்: தலைவர்: த. முத்துச்சாமிப்பிள்ளை, முதலியார் சின்னத்தம்பி, சி. சிவசுப்பிரமணியம். சு. சிவசிதம்பரம், டாக்டர் த அ. சுப்பிரமணியம், நா. சிவரத்தினம், த. நடேஸ்வரன், சோ. பரஞ்சோதி, இ. லட்சுமணன், ஆ. தில்லைநாதன், ச. த. சின்னத்துரை, நீலகண்டன், மு. செ. கந்தையா, மு. வயிரமுத்து, த முருகேசம்பிள்ளை, டாக்டர் நடராசா சி. சரவணமுத்து, சி. கந்தையா.

இந்து மகாசபையின் ஆண்டு விழாவைக் கொண்டாடுமுகமாக மேமாதத்தில் ஒருநாளை பின்புதெரிவுசெய்வதெனக் காரியதரிசி கூறினார். இவ்விழா யாழ்ப்பாணத்தில் நடைபெறுமென அறிவிக்கப்பட்டது.

# "யேசு, காந்தி, கென்னடி போன்றவர் லூதர்கிங்"

சுழிபுரம், ஞாயிறு

"நீக்ரோமக்களின் பெருந்தலைவராகவும், உலக சமாதானப் பிரியராகவும், காந்தியின் அகிம்சைவழி நின்று போராடும் ஓர் உயர்ந்த தலைவராக வாழ்ந்த டாக்டர் மார்ட்டின் லூதர் கிங் இளம் வயதில் இனவெறியன் ஒருவனால் சுட்டுக் கொல்லப்பட்டது உலகுக்கு பெரும் இழப்பாகும். யேசுநாதர், காந்தி, கென்னடி போன்ற உலக பெரியார்களின் வாரிசாக லூதர் கிங் என்றும் திகழ்வார். அவருடைய கொலை எமக்கு ஒரு பேரிடியாகும்.

இவ்வாறு தொல்புரம் கென்னடி கழகத்தின் தலைவர் சண். கந்தையா, மார்ட்டின் லூதர் கிங் அவர்களின் மறைவு குறித்து நடைபெற்ற அனுதாபக் கூட்டத்தில் பேசுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

பெற்றது.


திரு. இ. நாகலிங்கம் தலைவராகவும், திரு. வே. வி. மூர்த்தி செயலாளராகவும், திரு. அ. பாலசிங்கநாயகம் பொருளாளராகவும் எண்மர் அடங்கிய நிர்வாகசபை உறுப்பினரும் தெரிவு செய்யப்பட்டனர்.

வரி விளம்பரம்

காணவில்லை

P 734549, 734550 இலக்கங்களுள்ள இரு கூப்பன்கள் நெல்லியடியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கரவெட்டி வடக்கு விதானையார் ஆ. தாமோதரம்பிள்ளையிடம் ஒப்படைக்கவும். 1418

இப்பொழுது திரையிடப்படுகிறது!
கிங்ஸ்லி [கொழும்பு] பிளாசா [வெள்ளவத்தை] வெலிங்டன் [யாழ்ப்பாணம்]
விஜயா [மட்டுநகர்] ஸ்ரீகிருஷ்ணா [திருமலை] விஜிதா [ஹட்டன்]



சிவாஜி கணேசன்— சாவித்திரி
ஜெமினி கணேசன், பத்மினி,
கே. ஆர். விஜயா, தேவிகா, நாகேஷ்
மற்றும் பலர் நடிக்கும்
சரஸ்வதி சபதம்
(ஈஸ்ட்மென் கலர்)

வருக! வாங்குக!!
புதுவருட
விசேஷ மலிவு விற்பனை
6-4-68 முதல்
நடைபெறுகிறது.



கண்கவர் வண்ணங்களில்
* நைலெக்ஸ் சாரி * பட்டர் நைலன்
* பிறை நைலன் * டெக்ரோ பிளேன்
* பிரின்டெட் சாரி * டெக்கா சாரி
ஆடவரின் உள்ளத்தைக் கொள்ளை கொள்ள
சேர்ட்டுகள், சாரங்கள், வேஷ்டிகள்
பிள்ளைகளின் அழகைப் பிரமிக்கச் செய்யும்
பேபி கவுண்கள் — சூட்கள்
விலைகள் வெகுவாக குறைக்கப்பட்டிருக்கின்றன.
மலிவான விலையில் சிறந்த தரமான உடைகளை
பெற்று இதமாக மனம் மகிழ
வருக! வாங்குக!
ஞானபண்டிதன்
ஜவுளிக் கடை
228, K. K. S. வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 7107

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாஷிங்டன், சிகாகோவில் தீவிர இனக்கலவரங்கள் மீண்டும் வெடித்தன

## 19 பேர் கொல்லப்பட்டனர்

வாஷிங்டன், ஏப். 7

அமெரிக்காவின் முக்கிய நகரங்களில் நேற்று மீண்டும் புதிதாகக் கலவரங்கள் தோன்றின. இக்கலவரங்களில் இதுவரை 19 பேர் கொலைப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இவர்களில் 9 பேர் சிக்காகோ நகரில் மட்டும் கொல்லப்பட்டனர்.

தலைநகரான வாஷிங்டனில், மூன்று இடங்களில் தீவைக்கப்பட்டது. அத்தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த தீயணைக்கும் படையினரைப்பாதுகாக்குமுகமாக, பொலிசாரும் ராணுவத்தினரும் அவ்விடங்களில் நிறுத்தப்பட்டிருந்தனர்.

வாஷிங்டனில் 8,000 துருப்புகளை ஜனாதிபதி ஜோன்சன் வரவழைத்துள்ளார். அந்நகரில், பதினாலரை மணி நேரமாக ஊரடங்குச்சட்டம் விஸ்தரிக்கப்பட்டுள்ளது. 2,500 பேர் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சூறையாடல், தீவைத்தல், சுடுதல் ஆகிய சம்பவங்கள் அடுக்கடுக்காக நடைபெற்று வந்த சிக்காகோ நகரமும், ஊரடங்குச் சட்டத்தின்கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது.

சிக்காகோ அதிகாரிகள், மேலதிக துருப்புகளை அந்நகருக்கு அனுப்புமாறு ஜனாதிபதி ஜோன்சனிடம் கோரியுள்ளனர்.

## கடை வெடிப்புச்சம்பவத்தில் 15 பேர் மாண்டனர்

இதற்கிடையில், இந்தியானா ராஜ்யத்திலுள்ள ரிச்மண்ட் நகரில், துப்பாக்கிகள் மற்றும் சிறுவர் விளையாட்டுப்பொம்மைகள் விற்கும் ஒரு கடையில் ஏற்பட்ட வெடிப்பு சம்பவமொன்றில் 15 பேர் இறந்துள்ளனர்.

இந்த வெடிப்புச் சம்பவத்துக்கும் தற்போது நடக்கும் இனக்கலவரங்களுக்கும் தொடர்புஉண்டாஇல்லையா என்பது இதுவரை தெளிவாகவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.

கடையின் இடிபாடுகளுக்குள் மேலும் சடலங்கள் இருக்கலாம் எனப் பொலிசார் நம்புகின்றனர். கடையில் பற்றிய தீ விரைவில் அக்கம்பக்கமெங்கும் பரவி, சுமார் 30 கட்டிடங்கள் தீயினால் பாதிக்கப்பட்டன.

## கொலையாளியைப் பிடிக்க உதவுபவர்க்கு 1,50,000 டொலர்

டாக்டர் மார்டின் லூதர் கிங்கின் கொலையாளியைத் தேடும்வேலை, டாக்டர் கொலை செய்யப்பட்ட மெம்பிஸ் பட்டினத்திலிருந்து பல நூற்றுக்கணக்கான மைல்களுக்கு அப்பால் விரிவடைந்துள்ளதாக அமெரிக்க அட்டோர்னி ஜெனரல் அறிவித்துள்ளார்.

கொலையாளியை எப்படியாவது கண்டுபிடித்தேயாவது என்று அவர் மீண்டும் உறுதி கூறியுள்ளார்.

கொலையாளியைக் கண்டுபிடிப்பதற்கு உதவுபவர்களுக்கு அளிக்கப்படும் வெகுமதி இப்போது 1 லட்சத்து 50,000 டொலர் ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது.

## இறுதிச் சடங்குகளில் ஜோன்சன் கலந்து கொள்வார்

டாக்டர் கிங்கின் இறுதிச் சடங்கும், ஊர்வலமும் செவ்வாய்க்கிழமையன்று நடைபெறவிருக்கின்றன. இதன் காரணமாக, அமெரிக்க காங்கிரசின் கலப்புக்கூட்டத்தை ஜனாதிபதி ஜோன்சன் ஒத்திபோட்டுள்ளார். டாக்டர் கிங்கின் இறுதிச் சடங்குகளில் ஜோன்சனும்கலந்து கொள்வார் என எதிர்பார்க்கப்படுகிறது.

அமெரிக்காவின் பல்வேறு பகுதிகளிலிருந்தும், 1 லட்சத்துக்குமதிகமான மக்கள், டாக்டர் கிங்கின் இறுதிச் சடங்குகளில் கலந்து கொள்ள, அட்லாண்டா நகரம் வந்து சேருவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

## நாஸர்-ஹூசெயின் பேச்சுகள்

கெயிரோ, ஏப்ரல் 7

ஜோர்தான் மன்னர் ஹூசெயின், நேற்றுக் கெயிரோ வந்துசேர்ந்தார். அவர் ஐக்கிய அரபுக் குடியரசு ஜனாதிபதி நாஸருடன் மேற்கு ஆசியா பற்றி விவாதிப்பார்.

நாஸருடனான பேச்சுவார்த்தைகளின்போது, அரபு உச்சி மாநாடொன்றைக் கூட்டுவது பற்றி ஜோர்தான் மன்னர் வலியுறுத்துவாரென எதிர்பார்க்கப்படுகிறது.

## ஆசிய அபிவிருத்தி வங்கி தலைவர் கருத்து

மணிலா, ஏப்ரல் 7

அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளின் கடன் கோரிக்கைகளை ஆசிய அபிவிருத்தி வங்கி பரிசீலனை செய்துவருவதாக, அதன் தலைவர் திரு. வட்டனுபு இங்கு தெரிவித்தார்.

ஆசிய அபிவிருத்தி வங்கியைத் தமது சொந்த நிறுவனமொன்றாகவே அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகள் கருதுவதாகவும் அவர் கூறினர்.

விசேஷநிதியொன்றை வங்கி நிறுவவிருப்பது பற்றி அவர் குறிப்பிடுகையில், இந்த விசேஷநிதிக்கு உதவ, அமெரிக்கா, கனடா, ஜப்பான், நெதர்லாண்ட்ஸ் ஆகிய அபிவிருத்தியடைந்த நாடுகள் முன்வந்துள்ளதாக திரு. வட்டனுபு மேலும் தெரிவித்தார்.

மைசூர்

## காங்கிரஸ்காரர் சொத்துவிபரங்கள்

மைசூர், ஏப்ரல் 7

மைசூர் பிரதேச காங்கிரஸ் கமிட்டியில் 1947 தொடக்கம் தலைவர், காரியதரிசி ஆகிய பதவிகளை வகித்தவர்களை, 1947க்கு முன்னும் பின்னுமுள்ள அவர்களது சொத்து, வருமான விபரங்களை வெளியிடுமாறு மைசூர் முதல் மந்திரியும், காங்கிரஸ் தலைவருமான திரு. நிஜலிங்கப்பா கேட்டுக் கொண்டுள்ளார். பதவி வகித்தோரின் உறவினருக்கும் இந்த விதி பொருந்துமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## காரியாலயம் இடமாற்றம்

யாழ்ப்பாணம், திங்கள்

தமிழ் காங்கிரஸ் தலைமைக் காரியாலயம் கொட்டடியிலிருந்து, நேற்று பிரதான வீதியில் உள்ள ஒரு இடத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.

## கனடா ஆளுங்கட்சியின் புதிய தலைவர்

### திரு. ட்ருடோ தெரிவு

ஒட்டாவா, ஏப்ரல் 7

கனடாவின் ஆளுங் கட்சியான லிபரெல் கட்சியின் தலைவராக திரு. பியர் எலியட் ட்ருடோ தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

பிரதமர் பதவியிலிருந்து ஓய்வெடுக்கப் போவதாக அறிவித்துள்ள இப்போதைய கனடாப் பிரதமர் திரு. லெஸ்டர் பியேர்ஸனின் இடத்தை திரு. ட்ருடோ நிரப்புவாரென்பது நிச்சயமாகிவிட்டது.

திரு. ட்ருடோ, இப்போதைய மந்திரிசபையில், நீதி மந்திரியாகவுமுள்ளார். பிரெஞ்சு கனடியரான இவருக்கு வயது 46 ஆகும்.

## வீதிவிஸ்தரிப்புக்கு ரூபா 10,000 இலவசமாக வழங்கினர்

புன்னாலைக்கட்டுவன், ஞாயிறு

ஊரெழு விநாயகர் ஆலயத்திலிருந்து கரந்தன் செல்லும் வீதியை விஸ்தரிக்க உரும்பராய்ப் பட்டினசபை உபதலைவர் திரு. அ. காராளசிங்கம் மேற்கொண்ட முயற்சியைத் தொடர்ந்து ரூ. 10,000 பெறுமதியான நிலம் இலவசமாகப் பட்டினசபைக்கு வழங்கப்பட்டது. இதற்கான நிலங்களை வழங்கிய திருவாளர்கள் க. கதிரவேலு, கு. விஜயரத்தினம், வ. கந்தையா, ச. நாகலிங்கம், தி. குலசேகரம்பிள்ளை ஆகியோரை திருவாளர்கள் காராளசிங்கம், ஊரெழு கிராமாபிவிருத்திச் சங்கத் தலைவர் திரு. ச. கதிரவேலு, கிராமசேவையாளர் திரு. வே. சின்னத்துரை, திரு. மு. சங்கரப்பிள்ளை, திரு. மு. சிவஞானம் ஆகியோர் பாராட்டினர்.

## சங்கானை கொலை வழக்கு

குரும்பசிட்டி, ஞாயிறு

வைத்திய அதிகாரியின் சாட்சியம் பதிவுசெய்யப்படுவதற்காக சங்கானை குமரேசன் கொலை வழக்கு விசாரணை 16-ந் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

சங்கானை நிச்சாமம் வாசியான வன்னியன் குமரேசன் என்பவரை இவ்வருடம் ஜனவரி மாதம் 31-ந் திகதி கொலை செய்ததாக அதே இடத்தைச் சேர்ந்த செல்வரத்தினம், சுப்பையா, நடேசு, ஆறுமுகம், சுப்பிரமணியம் ஆகிய ஐவருக்கு எதிராக சங்கானைப் பொலிசாரால் இவ்வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

## ஆலய உற்சவம்

வவனியா, ஞாயிறு

கரைச்சிப் பிரிவிலுள்ள புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய ஆண்டு உற்சவம் இம்மாதம் 11-ம்திகதி நடைபெறவிருக்கிறது.

உற்சவத்திற்கு வரும்யாத்திரீகர்களின் நலனை முன்னிட்டு விசேஷ பஸ் போக்குவரத்து சேவைக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

# அமெரிக்க - வடவியட்னும் சமாதான பேச்சுவார்த்தைகள்

## ஜெனீவாவில் நடத்தலாமென அமெரிக்கா ஆலோசனை

வாஷிங்டன், ஏப்ரல் 7

வியட்னும் சம்பந்தமாகப் பூர்வாங்கப் பேச்சுவார்த்தைகளை உடனடியாக ஜெனீவாவில் வைத்துக்கொள்ளலாம் என வட வியட்னுமிடம் அமெரிக்கா ஆலோசனை கூறியுள்ளதாக வாஷிங்டனில் அறிவிக்கப்பட்டுள்ளது.

இச்செய்தியை வெள்ளை மாளிகையிலுள்ள ஜனாதிபதி ஜோன்சனின் பத்திரிகைக் காரியதரிசி அறிவித்தார். இந்த ஆலோசனையை ஜனாதிபதி ஜோன்சன், கடந்த புதன்கிழமையன்று லாவோஸிலுள்ள வடவியட்னும் அதிகாரி ஒருவருக்கு அனுப்பிய செய்தியில் தெரிவித்துள்ளதாக பத்திரிகைக் காரியதரிசி மேலும் கூறினர்.

அச்செய்தியில், இத்தகைய பூர்வாங்கப் பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்ள, அமெரிக்க சுற்று விஜயத் தூதுவரான திரு. அவெரில் ஹரிமன் எப்போதும் தயாராகவுள்ளதாக ஜனாதிபதி ஜோன்சன் குறிப்பிட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

இந்த ஆலோசனைக்கு, வட [illegible] இது வரை எவ்வித பதிலும் கிடைக்கவில்லையென்று தெரிகிறது.

டீன் ரஸ்க் கருத்து

ஆஸ்திரேலியாவில், ஆஸ்திலேயப் பிரதமருடன் தமது பேச்சுவார்த்தைகளை முடித்துக்கொண்டு அமெரிக்கா திரும்பிக்கொண்டிருக்கும் அமெரிக்க ராஜாங்க காரியதரிசி திரு. டீன் ரஸ்க், வியட்னும் சமாதானத்துக்கான முயற்சிகள் படிப்படியாகவே எடுக்கப்படவேண்டும் என்று கூறியுள்ளார்.

வடவியட்னும் மீதான அமெரிக்கக்குண்டு வீச்சு நிறுத்துதல், மற்றும் போர் நடவடிக்கைகளை நிறுத்திக் கொள்ளுதல் ஆகியநடவடிக்கைகளைப் பற்றி மட்டுமே அமெரிக்காவுடன் பேச வடவியட்னும் இணங்கியுள்ளதாகக் குறிப்பிட்ட திரு. ரஸ்க், ஜோன்சனின் குண்டு வீச்சுக்குறைப்பு அறிவிப்பு, ஈற்றில் ஒரு நிரந்தர சமாதானத்துக்கு வழி வகுக்குமெனத்தாம் நம்புவதாகத் தெரிவித்தார்.

நேற்று, ஜனாதிபதி ஜோன்சன், வியட்னுமில் அமெரிக்கத்துருப்புகளின் தளபதியாகக் கடமையாற்றும் ஜெனரல் வெஸ்ட்மோர்லாண்டைச்சந்தித்து, வியட்னும் பற்றிப்பேசினர்.

ருமேனியா வரவேற்பு

ஜோன்சனின் அறிவிப்புக்கு அனுசரணையான பதிலை வடவியட்னும் தெரிவித்துள்ளதை ருமேனிய அரசாங்கம் வரவேற்றுள்ளது.

உத்தியோக பூர்வமாக வெளியிடப்பட்ட ஓர் அறிக்கையில், ஹனோய் எடுக்கும் சமாதான நடவடிக்கைகள் அனைத்துக்கும் ருமேனியா தனது முழு ஆதரவையும் அளிக்குமென ருமேனிய அரசாங்கம் தெரிவித்துள்ளது.

ஜப்பான் சமரசம்

வியட்னும் போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான நடவடிக்கைகள் சம்பந்தமாக, சைகோனுக்கும் அமெரிக்காவுக்குமிடையே சமரசம்செய்ய ஜப்பான் முன்வந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

ஒருவர் மீது அன்பாக இருக்கும் போது நமக்கு மகிழ்ச்சி ஏற்படுகிறது. பலர் மீது அன்பு செலுத்துகையில், நம் மகிழ்ச்சியும் அதிகரிக்கிறது. எல்லாரையும், எல்லாவற்றையும் நேசிக்கும் போது, நமது இன்பத்துக்கு எல்லையுண்டா?

— சுவாமி ராமதாஸ்


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram EELANADU Jaffna
Post Box 49 Jaffna
Telephone 89.

யாழ்ப்பாணம் பிலவங்க வருஷம் பங்குனி மாதம் 26ம் திகதி [8-4-68]


## கட்டிப்பால் உற்பத்தி

பால் உணவுப் பொருள்களுக்காக கணிசமான அளவு பணம் வெளிநாடுகளுக்குச் செல்கிறதென்றும் தம்மன்கடவையில் அமைக்கப்பட்டுள்ள கட்டிப் பால் உற்பத்தி நிலையம் வெளிநாடுகளுக்குப் பால் உணவுகளுக்காகச் செல்லும் பணத்தை மீதப்படுத்தலாமென்றும் பிரதமர் திரு. டட்லி சேனநாயகா பொலனறுவையிலுள்ள தம்மன்கடவையில் கட்டிப்பால் உற்பத்தி நிலையத்தை ஆரம்பித்துவைத்துப் பேசுகையில் நம்பிக்கை தெரிவித்திருக்கிறார். பிரதமரது நம்பிக்கை வீண் போகமுடியாதென்பதற்கு உணவு உற்பத்தி இயக்கத்திலும் புதிய தொழில்களை ஆரம்பிப்பதிலும் அவருக்குள்ள ஆர்வம் ஓர் உதாரணம்.

'நெஸ்பிறே' போன்ற பால் பவுடர்களுக்கு நாட்டில் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டதும் நீண்ட 'கியூ'களில் பால் உணவுப் பொருள்களைப் பெறுவதற்காக நின்று பலர் அவஸ்தைப்பட்டுவருவதும் நாடறிந்த விஷயம். பால் பவுடர் பொருள்களுக்கு மட்டுமல்ல கட்டிப் பால் டின்களுக்கும் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டது. எதற்கும் வெளிநாடுகளையே எதிர் பார்த்திருக்கும் பழக்கம் நமது நாடு சுதந்திரமடைந்து இருபதாண்டுகளுக்குப் பின்னரும் நீடித்துவருவதே இத்தொல்லைகளுக்கெல்லாம் காரணம். வெளிநாடுகளை எதிர்பார்த்திராமல் நமக்குத் தேவையான பொருள்களை நாமே உற்பத்தி செய்து கொள்ளும் நிலை ஏற்படுமாயின் அத்தியாவசியப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்படாமலிருப்பதுடன் இப்பொருள்களுக்காக வெளிநாடுகளுக்குச் செல்லும் பணம் மீதப்படும். இப்பணத்தை நமது நாட்டில் புதிய தொழில்களில் முதலீடு செய்து நாட்டின் முன்னேற்றத்திற்கு வழிகாண முடியும்.

தம்மன்கடவையில் பிரதமர் ஆரம்பித்துவைத்துள்ள கட்டிப்பால் உற்பத்தி நிலையம் நமது நாட்டுக்குத் தேவையான கட்டிப் பால் முழுவதையும் உற்பத்திசெய்து நமது தேவையைப் பூர்த்தி செய்துவிடுமென்று எதிர்பார்க்க முடியாது. ஆயினும் நமது கட்டிப்பால் தேவையை ஓரளவாவது பூர்த்திசெய்து வெளிநாடுகளுக்குச் செல்லும் நமது பணத்தில் ஓரளவையாவது மீதப்படுத்துமென்பது நிச்சயம். கட்டிப் பால் நமது நாட்டில் உற்பத்தி செய்யப்பட்டாலும் குழந்தைகளின் பால் உணவுத் தேவையை அது பூர்த்திசெய்துவிடுமென்றும் எதிர்பார்க்க முடியாது.

நமது குழந்தைகளுக்கும், மற்றவர்களுக்கும் தேவையான சுத்தமான பால் கிடைக்கவேண்டுமானால் பசு வளர்ப்பில் அரசாங்கமும் உள்ளூராட்சிமன்றங்களும் அதிக கவனம்செலுத்த வேண்டியது அவசியம். பசுக்களுக்குத் தேவையான நல்ல உணவு கிடைக்கவும் பசுக்கள் மேய்வதற்கு நல்ல புல்வெளிகளை ஏற்படுத்தவும் அரசாங்கமும் உள்ளூராட்சி மன்றங்களும் முன்வருவதுடன் பசு வளர்ப்பில் ஈடுபட்டுள்ள மக்களுக்கும் உதவியும் உற்சாகமும் அளிக்க வேண்டியதும் அவசியம்.

### இன்று யோகசுவாமிகள் குருபூஜை

# குருநாதர் காட்டிய வழி

— செல்வி விஜயா கனகசபாபதி —

ஆம்! மனதைக் கட்டுப்படுத்தமுடியாமல் ஆசை, பாசம், பந்தத்தினால் அல்லல்பட்டு மனம் பலதையும் பத்தையும் எண்ணி கூத்தாடுகின்றது. ஆசையை வென்று விட்டால் நாம் அனைவரும் என்றோ ஞானிகளாக மாறியிருப்போம். ஆசை இல்லாத மனிதன் அரை மனிதன் என்று சும்மாவா சொல்லி வைத்தார்கள். ஆனால் அந்த ஆசையின் அவாவினால் இன்னும் வேண்டும்—போதாது என்று மனம் வேதனைப்படும்போது, கண்ணீர் உருகும்போது, எம்மை நாமே பார்த்து அழுவதா இல்லை சிரிப்பதா? ஆசையை அகற்ற முடியாத நிலையில்,

''தீர்த்தங்களாடினேன்
யாத்திரை செய்தேன்
சித்தந் தெளியவில்லை
என்ன நான் செய்வேன்
கூத்தாடுதே மனமென்ன
கொடுமை
கும்பிட்டேன் குருநாதா
உன் அடிமை
யாத்தெனை யாள்வ
துன்றன் கடமை
கருணைக் கடலே நான்
உன் உடைமை''

என்று இறைவனை இறைஞ்சி நிற்பதைவிட வேறு நாம் என்ன செய்ய முடியும்?

கூத்தாடுகின்ற எம் மனம் ஆறுதல் அடைவதற்கு யோகசுவாமிகள் எத்தனையோ விதமான வழிவகைகளை எமக்கு வகுத்துத் தந்துள்ளார்.

''ஒன்றென இரண்டென
எண்ணவும் மாட்டேன்
நன்றெனத் தீதென
நண்ணவும் மாட்டேன்
அன்றென இன்றென
அறையவும் மாட்டேன்
சென்றன வருவன
தெரிந்திட மாட்டேன்
இகழ்ச்சி புகழ்ச்சியென
ஏங்கவும் மாட்டேன்
மகிழ்ச்சி விலைமனம்
வைக்கவும் மாட்டேன்
முகமன்சொல் வாரிலே
மோகமும் வையேன்
அகம்பிர மாஸ்மியென்
றனுதினம் நையேன்''

என்ற மனப்பான்மையோடு நாம் வாழப் பழகிக்கொண்டோம் என்றால் ''தீதும் நன்றும் பிறர் தர வாரா'' நிலையில் நாமே எம்வாழ்வை நிர்ணயிப்பவர்களாக மகிழ்ச்சியோடு வாழலாம். இதைவிடுத்து பொன்னாசை, பெண்ணாசை, மண்ணாசையால் நாமே எம்மை சினனுப்படுத்தல் அழகாமோ? வஞ்சம், பொறாமை, கோபம் முதலிய தீய எண்ணங்களை எம் உள்ளத்தில் இருந்து அகற்றி எம் குருகாட்டிய வழியில் செல்வோமாயின் நாம் எல்லோரும் இந்நாட்டு மன்னர்களாகத் திகழலாம். எவர்மீதும் எக்குறையும் கூறாது ''ஒரு பொல்லாப்புமில்லை'' என்று, எல்லாரிடத்திலும் அன்பு வைத்து செம்மையான வாழ்வு வாழப் பழகிக்கொள்வோமாக.

'எப்பவோ முடிந்த காரியமாக'' இறைவன் ஒவ்வொருவருக்கும் வேண்டியதை செய்துகொண்டே வருகின்றார். நாமே எல்லாவற்றையும் எம்தலையில் தூக்கிப்போட்டு வேதனையடைகின்றோம். நிலையாமை ஒன்றே நிலைத்துநிற்கும் இவ்வாழ்வில்,

'ஆவதோ ஒன்றும் இல்லை
அழிவதோ ஒன்றுமில்லை
நோவதோ பிறர்தம்
மாட்டு நூதனம் ஒன்று
மில்லை
தேவனை வேண்டி நின்றால்
சீவனே சிவனாய்
தோன்றும்
பூவலந் தன்னில் மீண்டும்
பிறப்பரோ புகலு
வாயே''

எனப் பாடி ''நாமொன்றும் அறியோம்'' எல்லாம் ஆவதும் அவனாலே, அழிவதும் அவனாலே, என எண்ணுவோமாயின் இவ் உலகம் ''முழுவதும் உண்மையாக'' திகழ்ந்து எமக்கு மனச் சாந்தி நிச்சயம் கிட்டும்.

'தாவித் தாவிச் செல்லும்
மனத்தை தம்பி
கேளடா
கூவி கூவி யழைத்துக்
குடியிருத்தடா''

கூத்தாடுகின்ற, தாவிச் செல்கின்ற எம் மனதை கூவிக்கூவி அழைக்கும்படி கூறுகின்றார் எம் குரு.

''காயம் அழிந்துவிடும்
காண்பனவும் ஒழிந்து
விடும்
மாயமான வாழ்வை
விட்டு — கிழியே

(5ம் பக்கம் பார்க்க)

# வெள்ளையர்-கறுத்தவர் சண்டைவலுக்கிறது: அமெரிக்காவில் உள்நாட்டு யுத்தம்வரலாம்

— பென்னர் புறெக்வே பிரபு

றொடீசியா, தென் ஆபிரிக்கா முதலிய பிரச்னைகள் சர்வதேச நாணய நெருக்கடியில் தங்கியுள்ளன. தங்கத்தின் விலை உயர்ந்து விட்டபடியால் தென் ஆபிரிக்காவின் செல்வம் அதிகரித்து விட்டது. அதை எதிர்ப்பது கடினம். டொலர் நெருக்கடியால் றொடீசியாவை பிரிட்டன் முதலிய நாடுகள் கடுமையாக எதிர்க்க தயங்குகின்றன! தங்கச் சிலுவையில் நாம் அறையப்பட்டு விட்டோம்.

ஒருதுண்டு உலோகத்துக்கு நாம்ஏன் கடமைப்பட வேண்டும்? சுலபமானதென்பதற்காக பண்டமாற்றுக்கு பதிலாக இதை உபயோகித்தோம். இப்பொழுது அது எம்மை விழுங்கிவிட்டது. கோடானு கோடி மக்களின் வாழ்க்கை இந்தப் பொன் தூளின் விலையில் தங்கியிரளது.

பதுக்கல் முதலிய வழிகளால் சில நாடுகள் தங்கத்தை அரிதாக்கி விடுகின்றன. இதற்கு அடிமைப்பட்டிராமல் பண் மாற்று செய்யும் பொருளுக்குஏற்ற முறையில் சர்வதேசவர்த்தகத்தை அமைத்துக்கொள்ள முடியாதா? அபிவிருத்தியடையும் நாடுகளின் தேவைகளைப் பற்றி புதுடில்லியில் நடைபெறும் மகாநாட்டின் பரிதாபமான நிலையை நாம் அறிவோம். பண்டங்களை மாற்றிக் கொள்பவர்களிடையே ஒரு சர்வதேச ஒப்பந்தம், வேண்டும். அந்தப் பண்ட மாற்றின்சின்னமான தங்கத்தை கையாளும்வங்கிகளுக்கிடையிலல்ல.

முழு உலகத்தையும் ஒரே குடும்பமாக மதிக்கும் சாவதேசிய உணர்ச்சி நம்மிடத்தில் உண்டாவது முக்கியம். நாட்டு எல்லைகளைப்பொருட்படுத்தாது ஒரு நாட்டில் என்ன உற்பத்தியாகிறது. அதற்கு என்ன தேவைஎன்ற பரந்த மனப்பாங்கு வேண்டும். இது ஓர் எட்டாத லட்சியமாகத்தோன்றலாம். ஆனால் உலகத்து நாடுகள் எல்லாம் ஒன்றில் ஒன்று தங்கியிருக்கிறதென்பதை நாம் உணராவிட்டால், இந்நூற்றுண்டு முடிவதற்குள் செல்வமான நாடுகளுக்கும் செல்வமற்ற நாடுகளுக்கும்நாசம் விளைவது நிச்சயம்.

றொடீசியாவில் ஆபிரிக்க சனங்களுக்கு மேல் சர்வாதிகாரம் செலுத்தும் வெள்ளைக்காரக் கும்பல் வெள்ளையர் என்றபடியால் பிரிட்டனும் பராமுகமாயிருக்கிறதென்று கூறலாம். ஆனால் உண்மையான காரணம் பொருளாதாரம்.

றொடீசியா மீது விதித்த பொருளாதாரத் தடையை கடைசிவரை கைப்பிடித்து தென் ஆபிரிக்காவிலிருந்து றொடீசியாவுக்கு பொருட்கள் செல்வதை பிரிட்டன் ஏன் தடுக்கவில்லை? ஏனென்றால் தென் ஆபிரிக்காவில் பிரிட்டனுக்கு ஏராளமான முதலீடுகள் உண்டு. தென் ஆபிரிக்காவுடன் பிரிட்டன் நடத்தும் வர்த்தகம் முக்கியமானது. உலகத்தில் விளையும் தங்கத்தில் பெரும்பாலும் தென் ஆபிரிக்காவில் விளைவதால்.

தெரு, ரயில் போக்குவரத்துகளையும் தென் ஆபிரிக்க துறைமுகங்களையும் அடைந்தால் தான் தென் ஆபிரிக்காவிலிருந்து றொடீசியாவுக்கு பொருட்கள் செல்வதை தடுக்கலாம்.

நிதி, வர்த்தகம் காரணமாகவே பிரிட்டன் றொடீசியா விஷயததில் வலோற்காரம் செலுத்த தயங்குகிறது. ஐக்கிய நாடுகள்சபை கூட வலோத்காரம் செலுத்த முடியாது, ஏனெனில் அமெரிக்காவுக்கும்தென் ஆபிரிக்காவில் முதலீடுகள் இருப்பதால் அதன் உதவியின்றி ஐ. நா. ஒன்றும் செய்ய முடியாது.

றொடீசியாவில்சமீபத்தில் நடந்த தூக்கு தண்டனைகள் பற்றிய கூக்குரல் ஓய்ந்ததும் பிரிட்டனும் றொடீசியாவும் பேச்சுவார்த்தைகள் நடத்தக்கூடும். வெள்ளைக்கார சிறுபான்மையினருடன் எவ்வித ஒப்பந்தம் ஏற்பட்டாலும் அது ஆபிரிக்க பெரும்பான்மைக்கு துரோகமாகவே முடியும். இதனால் ஓர்றில்லா சண்டைகள் ஏற்பட்டு தெற்கு ஆபிரிக்கா முழுவதும் யுத்தகளமாக மாறக் கூடும்.

போர்த்துக்கீசு குடியேற்ற நாடுகளாகிய அங்கோலாவி

(5ம் பக்கம் பார்க்க)

# ஐயாறன் எழுதுவது

அமரர் மார்ட்டின் லூதர் கிங்கைக் கொன்றது யார்? அவனையோ, அவர்களையோ கண்டுபிடிப்பவர்களுக்கு ஒரு லட்சத்து 55 ஆயிரம் டாலர் பரிசளிப்பதாக அமெரிக்க அரசாங்கம் அறிவித்திருக்கிறது.

இந்த அறிவிப்பினால் கொலைகாரன் பிடிபடுவான் என்பது மிகவும் சந்தேகம். சதி பெரிய திட்டம்போட்டு நடந்துள்ளது. கென்னடியைக் கொன்றது யார் என்பதே இன்னும் சரியாகத் தெரியவில்லை. அதையே அறியாதபோது, கிங்கைக் கொன்றவன் எப்படிப் பிடிபடப்போகிறான்!

ஃ ஃ ஃ

கொலைசெய்தது யாருடைய கை, அல்லது எந்தத் துப்பாக்கி என்பது முக்கியமல்ல. எந்த நோக்கத்துடன் இக் கொலை நடந்துள்ளது என்பதே கேள்வி. அமெரிக்காவில் வெள்ளையரல்லாதவருக்கு, சமமான மனித உரிமை கிடையாது என்றும், அப்படிக் கேட்பருக்கு துப்பாக்கி ரவைதான் பதில் என்றும் இக்கொலை சொல்லாமல் சொல்லுகின்றது.

நிறத் துவேஷம் எந்தெந்த உள்ளத்தில் உள்ளதோ, அத்தனை உள்ளங்களும் உண்மையில் இக் கொலைக்குப் பொறுப்பாகும்.

அங்குள்ள நிற துவேஷத்தைப் போல் இங்கும் பல பல பல துவேஷங்கள் இருக்கின்றன. மனிதனை சாதி, சமயம், இனம், நாடு, மொழி, பணம், நிறம் முதலியவற்றைக் காரணமாகக் கொண்டு வேற்றுமைப்படுத்தி, துவேசங்களை நம்மிலும் பலர் வளர்த்து வருகிறோம். நம் மனதில் உள்ள இந்த வெறுப்பும் துவேஷங்களும் இக்கொலைக்குக் காரணமாதலால், நாமும்கூட இக்கொலைக்குக் காரணராவோம். கொலைசெய்த வெள்ளையன்தான் குற்றவாளியெனியென்றும், நமக்கு இதில் எவ்வித சம்பந்தமுமில்லையென்றும் நாம் கருதிக் கொள்வது சரியாகாது.

டாக்டர் கிங்கின் இந்த மகத்தான உயிர்த்தியாகம் நம் மனதிலுள்ள மேற்குறித்த துவேஷ உணர்ச்சிகளை நமக்கு அறிவுறுத்தி, அவற்றை நீக்க நம்மைத் தூண்டுகின்றது. மனதில் அன்பு இருந்தால் இவ்வித துவேஷங்கள் இரா. அன்புக்குத்தானே உலகில் பெரும் பஞ்சமாக உள்ளது. ''அன்பே சிவம்'' என்று வாயளவில் கூறுவோம். ஆனால் நம் மனதில் அன்பு சுரக்கிறதா?

ஃ ஃ

அமெரிக்க பத்திரிகைகளெல்லாம் இக் கொலையைக் கண்டித்துள்ளதா? ''கொலைகாரனின் அந்த துப்பாக்கிரவையால், நம் ஒவ்வொருவரையும் சற்றே சாகடித்துவிட்டது'' என்று ஒரு பத்திரிகை கூறுகிறது.

அமெரிக்காவிலே தலைநகர் உள்ளிட்டு பல இடங்களிலும் கலவரங்கள், கொலைகள், கொள்ளைகள் எல்லாம் நடக்கின்றன. தங்கள் தலைவரின் அகிம்சா உபதேசத்தை மறந்து நீக்ரோவர்கள் ஆத்திரமடைந்து நாசவேலையில் இறங்கி விட்டார்கள். இதைப்பற்றி அமரர்கிங்கின் தந்தையாரும், வருந்தி, ''என் மகன் எந்த அகிம்சா கொள்கைக்காக உயிர்த்தியாகம் செய்தாரோ, அதை நினைந்து, பலாத்காரத்தில் அமெரிக்கர் யாரும் ஈடுபடவேண்

[5-ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "55 வயது ஒய்வை எதிர்ப்பதில் அர்த்தமில்லை"

கொட்டாஞ்சேனை, ஞாயிறு

"ஆசிரியர்கள் 55 வயதில் ஒய்வுபெறவேண்டுமென அரசாங்கம் கோருவதில் தவறில்லை. இதனைச் சில ஆசிரியர்கள் எதிர்க்கிறார்கள் இதில் அர்த்தமேயில்லை. நாட்டில் படித்த இளைஞர் பல்லாயிரக்கணக்கானோர் வேலையின்றித் திண்டாடுகிறார்கள். அவர்களது சேவையினை நாடு பெறமுடியாத நிலை நீடித்துவருகிறது. இந்நிலையில் அரசாங்க சேவையில் உள்ளோர் 55 வயதில் ஒய்வு பெறுவதன்மூலம் படித்த இளைஞர்கள் தொழில்வாய்ப்புப்பெற இடமளிக்கவேண்டும். இதுவே அரசினரின் விருப்பமாயிருக்கிறது. நாட்டுநலனைக் கருத்திற்கொள்வோரனைவரும் இதனைவரவேற்பர்"

இவ்வாறு அகில இலங்கை சுவீகரிக்கப்பெற்ற தமிழ்ப் பாடசாலை ஆசிரியர் சங்கச் செயலாளர் திரு. த. திருநாவுக்கரசன் சென்ற வெள்ளிக்கிழமை காலை கொட்டாஞ்சேனை கதீட்றல் கல்லூரியில் நடைபெற்ற மேற்படி சங்கத்தின் மேல்மாகாணக் கிளையின் அங்குரார்ப்பணக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

திரு. தி. க. முத்துச்சாமி இக்கூட்டத்திற்குத் தலைமை வகித்தார்.

திரு. திருநாவுக்கரசன் மேலும் பேசுகையில் அரசாங்க ஊழியர்கள் அனைவரையும் 55 வயதில் திடீரென ஒய்வுபெறுமாறு உத்தரவிடாது படிப்படியாக அதனை அமுலுக்குக்கொண்டுவரவேண்டுமென்றார்.

ஆசிரியர்களின் இடமாற்ற விஷயத்தில் கல்விப்பகுதி வரையறையான இடமாற்றத்திட்டம் ஒன்றினை வகுக்காமையால் காலத்திற்குக் காலம் இளம் ஆசிரியர்கள் பாதிக்கப்படுகிறார்களென்றும், அவர்களுக்கு நீதிவழங்கக் கல்விப் பகுதி தகுந்தநடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமெனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

தாய்ச் சங்கப் பொருளாளர் திரு. ச. கைலாயபிள்ளை பேசுகையில் ஆசிரியர் இடமாற்றச் சபையில் ஆசிரியர் தொழிற் சங்கப் பிரதிநிதிகளுக்கு மீண்டும் இடமளிக்கப்படவேண்டுமென்றும், தொழிற்சங்க ரீதியில் ஆசிரியர்கள் ஒன்றுபட்டுத் தங்கள் பிரச்னைகளுக்குத் தீர்வு காண முயலவேண்டுமென்றும் கூறினார்.

திரு. க. துரைசிங்கம் பேசுகையில் நான்கு ஆண்டு காலம் வெளிமாகாணங்களில் கடமையாற்றிய ஆசிரியர்களை அவர்களது சொந்த இடங்களுக்குக் கல்விப்பகுதி இடமாற்றம் செய்யவேண்டுமென்றார்.

திரு. கா. முருகப்பா, திரு. செ. வரதலிங்கம் ஆகியோருட்பட மற்றும் பலரும் பேசியபின்னர் மேல்மாகாணக் கிளையின் நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. தி. க. முத்துச்சாமி, உபதலைவர்கள்: திரு. செ. வரதலிங்கம், திரு. மு. நடேஸ், செயலாளர்: திரு. டபிள்யு. ஜ. சி. பெர்னாண்டோ, உபசெயலாளர்: திரு. அ. தர்பரானந்தம், பொருளாளர்: திரு. இ. சிவமணி.

## ஐயாறன்

[4-ம் பக்கத்தொடர்ச்சி]

டாம்" என்று கேட்டுள்ளார்.

பெண்ணுக்குத்தான் தெரியும் பெண்ணின் கஷ்டம். ஒரு வெறியனின் துப்பாக்கிக் குண்டுக்குப் பலியான கென்னடியின் மனைவி, "கிங்கின் மனைவிக்காகவும் குழந்தைகளுக்காகவும் நான் அழுகிறேன்" என்று ஓர் உருக்கமான செய்தியை விடுத்துள்ளார். பிறரைப் பற்றி வெறுப்பாகப் பேசுவதும்கூட கொலைக்குக் காரணமாகுமென்கிறார். வெறுப்புக்குப் பதில் நம் மனதில் அன்பு எப்போது சுரக்கப்போகிறது? என்று கேட்கிறார்.

கிங்கின் உயிர்த்தியாகத்திற்குப்பின், அமெரிக்க நீக்ரோவருக்கு அதிக உரிமை கிடைக்கக்கூடும். ஆனால் இதே நிறத் துவேஷக்கொள்கையைக் கடைப்பிடிக்கும் தென்னாபிரிக்கா, ரொடீஷியா முதலிய நாடுகளுக்கு அமெரிக்கா, பிரிட்டன் முதலிய நாடுகளின் மறைமுக ஆதரவு நீங்குமா? உலகின் பல பகுதிகளில் வெள்ளையரல்லாதார் குடியேறமுடியாமலுள்ள தடை நீங்குமா? அதற்குமுன் நம் சகோதரர் விஷயமாக நம் மனதிலுள்ள வெறுப்புகள் மறையுமா?

ஃ ஃ ஃ

உற்றான் நமக்குயரும் மதிச்
சடையான் புலன் ஐந்தும்,
செற்றார் திருமேனிப்
பெருமான் ஊர் திருச்
சுழியில்,
பெற்றான் இனி துறை
பத்திறம் பானுமதி
திருநாமம்
கற்றாரவர் கதியுட் செல்வர்
ஏத்தும் மது கடனே
— ஸ்ரீ சுந்தரமூர்த்தி
சுவாமிகள்.

(நமக்கு உற்றவனும், சந்திரனைச்சடையில் வைத்துக் காத்த கருணையாளனும், ஐம்புலனும் வென்ற திருமேனியையுடைய பெம்மான் திருச்சுழியிலேகோவில் கொண்டுள்ளார். அவரது திருநாமத்தைப் பயின்றவர் உயர்கதியில் செல்வர். ஆகவே அவரது திருப்பெயரைப் போற்றுமின். உய்வதற்கு அதுவே வழியும் கடமையும்.)

## 6 தினங்கள்......

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

திரம்பழுதடைந்துவிட்டது. குடிக்கத் தண்ணீர் கூட இல்லை. கொண்டல் காற்றினால் மேற்குதிசையை நோக்கியே படகு சென்றுகொண்டிருந்தது.

4-ம் நாள் இரவு முல்லைத் தீவிற்கு நேராக வரும்போது தூரத்தில் ஒரு படகை பார்த்தோம். நாங்கள் சத்தமிட்டு, கைகளைக் காட்டியும் பயன் ஏற்படவில்லை. அவர்கள் எங்களைக் கவனியாது சென்றுவிட்டனர்.

படகிலிருந்த மற்றும் இருவரும் நம்பிக்கையிழந்து அழத்தொடங்கி விட்டார்கள் 6 நாட்களும் நித்திரை கொள்ளாமல் விழித்திருந்தோம். களைப்பு மிகுதியினால் வள்ளத்தில் சில நேரங்கள் படுத்திருந்தோம். நான் பெற்றோரை நினைத்து அழுதுவிட்டேன்.

5-ம் நாள் இரவு 8 மணியளவில் ஓர் வெளிச்சம் தூரத்தில் தெரிந்தது. எங்கள் சாரங்களை தடியில் கட்டி, வெளிச்சம் வரும் திசைக்கு காட்டினோம். வெளிச்சம் அருகில் வந்ததும், அது ஒரு யந்திரப் படகு என்பதை அறிந்துகொண்டோம். பலத்த சப்தமிட்டு குளறினோம். அவர்கள் உடனே கயிறு தந்து எங்கள் படகை தங்கள்படகுடன் கட்டச் சொன்னார்கள்.

அவர்கள் தங்கள் சாப்பாட்டை முடித்துக்கொண்டபடியால் அவர்களிடம் உணவு கூட இல்லை. ஒருவரிடமிருந்த ரொட்டி ஞ்ச உணவைப் பகிர்ந்து சாப்பிட்டோம். 6-ம் நாள் காலையடிக்கு வந்தோம்.

## ரஷ்யா செல்கிறார்



யாழ்ப்பாணம், திங்கள்

சோவியத் ரஷ்யாவின் நவீன தொழில் நுட்ப விஞ்ஞானத்துறைகளைப் பார்வையிடவும், ரஷ்யப் பிரதமர் திரு. கொஸிஜின் உட்பட முக்கிய சோவியத்துத் தலைவர்களையும் சந்தித்துப்பேசும் வாய்ப்பு 20 வயதுடைய வல்வெட்டியைச் சேர்ந்த மாணவர் செல்வன் சந்திரகோபாலுக்கு கிடைத்துள்ளது.

50-வது ஆண்டு புரட்சி விழாவையொட்டி இலங்கை-சோவியத் நட்புறவுக் கழகம் நடாத்திய கட்டுரைப் போட்டியில் செல்வன் சந்திரகோபாலுக்கு முதல் பரிசு கிடைத்துள்ளது. இந்தப் பரிசே இவருக்கு ரஷ்யாவில் ஒன்றரைமாதகாலம் சுற்றுப்பயணம் செய்யும் சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

அடுத்த மாதம் முற்பகுதியில் விமானத்தில் ரஷ்யா பயணமாகும் இவர் காலஞ்சென்ற திரு. இளையதம்பி குமாரசாமியின் புதல்வராவார். ஸ்கந்தா மாணவரான இவர் உடுப்பிட்டி அ. மி. கல்லூரியின் பழைய மாணவராவார்.

## வல்வை......

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

நாயக்கா ஆகியோரின் உதவியுடன் 303 பொலிஸ் துப்பாக்கியால் சுட்டுக் கொலை செய்ததாகவும் அதற்கு உடந்தையாக இருந்ததாகவும் பம்பலப்பிட்டி பொலிஸ் டிப்போவைச் சேர்ந்த இன்ஸ்பெக்டர் திரு. எஸ். ஸி. பத்திராஜ மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

எதிரி சார்பில் வழக்கறிஞர் ஜோர்ஜ் கந்தப்பா புறக்டர் ஜே. பர்ணகிட்டியுடன் ஆஜரானார். வழக்காளி தரப்பில் வழக்கறிஞர்கள் என். சிவஞானசுந்தரம், பி. பாலவடிவேல், கே. மோதிலால்நேரு ஆகியோரின் உதவியுடன் புறக்டர்கள் கே. இரத்தினசிங்கம், என் நடராசா ஆகியோரின் அனுசரணையுடன் ஆஜரானார்கள்

எஸ். வேலுப்பிள்ளை இவ்வழக்குக்குரிய தஸ்தாவேஜுக்களை சமர்ப்பித்தார்.

எதிரியின் வழக்கறிஞர் ஜோர்ஜ் கந்தப்பாவினால் ஒன்றரை மணித்தியாலம் வரை தொகுப்புரை நிகழ்த்தப்பட்டது. மாஜிஸ்டிரேட் தீர்ப்பு வழங்குவதை இம்மாதம் 11-ந் திகதிக்கு ஒத்திவைத்துள்ளார்.

எதிரியை இம்மாதம் 11-ந் திகதி வரை றிமாண்டில் இருக்கும்படியும் உத்தரவிட்டுள்ளார்.

## எதிர்ப்புக் கூட்டம்

வல்வெட்டித்துறை, ஞாயிறு

வல்வெட்டித்துறைப் பொலிஸ் நிலையத்திற்கு அண்மையில் ஒரு சினிமாத் தியேட்டர் கட்டுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்துக் கூட்டமொன்று நடைபெற்றது.

இப்பகுதியில் ஒரு சினிமாத் தியேட்டர் கட்ட அனுமதிக்கக்கூடாதென்ற நடைபெற்ற கூட்டம் வல்வெட்டி பெரியதம்பிரான் கோவில் வீதியில் திரு. என். வடிவேலு தலைமையில் நடைபெற்றது.

திருவாளர்கள் என். தில்லையம்பலம், எஸ். நல்லையா, ஏ. இளையதம்பி, குழந்தைவேல், உடுப்பிட்டிக் கிராம சபைஅங்கத்தவர் பி. கணேசன் ஆகியோரும் கூட்டத்தில் பேசினர்.

## ஹோமியோபதிசிருஷ்டி கர்த்தாவின் 213-வது நினைவுவிழா

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணம் யூனியன் ஆஸ்பத்திரியில் டாக்டர் ஏ. கிருஷ்ணசாமி தலைமையில் வட இலங்கை ஹோமியோபதி சங்கத்தின் வருடாந்தக் கூட்டத்தில் ஹோமியோபதியின் சிருஷ்டி கர்த்தாவாகிய டாக்டர் சாமுவல் ஹானமன் அவர்களது 213-வது பிறந்த தின ஞாபகார்த்த விழாக் கொண்டாடப்பட்டது.

டாக்டர் சாமுவல் ஹானமன் வாழ்க்கை வரலாற்றைப் பற்றியும் ஹோமியோபதி வைத்திய முறையின் தோற்றம் பற்றியும் டாக்டர் வி. கே. விஸ்வலிங்கம் சொற்பொழிவாற்றினார்.

இந்திய ஹோமியோபதி உலகிலே ஒரு முக்கிய ஸ்தானத்தை வகித்து சென்ற 31-12-67-ல் இவ்வுலகினின்று மறைந்த டாக்டர் வீ. ஆர். மூர்த்திக்கு அஞ்சலி செலுத்து முகமாக இரண்டு நிமிட மௌனம் அனுஷ்டிக்கப்பட்டது. பின்பு ஒரு அனுதாபத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

சென்ற சிம்ம சனப்பிரசங்கத்தில் கொடுக்கப்பட்ட உறுதி மொழிக்கிணங்க கௌரவ சுகாதார அமைச்சரை விரைவில் ஹோமியோபதி வைத்திய முறையை அங்கீகரிப்பதற்கும், ஹோமியோபதி வைத்திய சபையை உருவாக்குவதற்கும் பாராளுமன்றத்தில் மசோதா சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளும் தீர்மானமொன்று கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

புதிய நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்;-

தலைவர்: டாக்டர் ஏ. கிருஷ்ணசாமி, செயலாளர்: திரு. எம். வேலுப்பிள்ளை, பொருளாளர்: டாக்டர் வி. க. விஸ்வலிங்கம், கமிட்டி உறுப்பினர்: டாக்டர் எம். கே. சிவப்பிரகாசம், திரு. வீ. யோகலிங்கம், டாக்டர் கே. சிவசுப்பிரமண்யகுரு, டாக்டர் கே. சண்முகம், டாக்டர் ஐ. பூபாலசிங்கம், டாக்டர் ஆர். எல். கந்தசாமி (நி.)

## புதிய அசையா மணிக்கு அபிஷேகம்

மட்டுவில், சனி

பன்றித்தலைச்சி கண்ணகி அம்மன் கோவிலின் புதிய அசையா மணிக்குக் கடந்த புதன்கிழமை காலை அபிஷேகம், ஆராதனையும் நடைபெற்றுமணியும் ஒலிக்கப்பட்டது. அன்பர்களின் உதவியுடன் மணிக்கூட்டுக் கோபுரக்குறைத்திருப்பணி நிறைவேற்றப்பட்டு விரைவில் அசையா மணி கோபுரத்தில் அமைக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

## குருநாதர்...

4-ம் பக்கத்தொடர்ச்சி

மலரடியைப் பணி
வோமே"

என இறைவணக்கம் செலுத்த எம்மை அழைக்கின்றார். அவரின் கூற்றின்படி நாம் வாழப் பழகிக் கொண்டோமானால் இவ்வுலகம் என்றோ ஓர் "அருமையான உலகமாக" மாறியிருக்கும். நாமும் அவர் வழிப்படி நின்று,

"அப்பனும் அம்மையும்
சிவமே
அரிய சகோதரரும்
சிவமே
ஒப்பில் மனைவியும் சிவமே
ஒதரும் மைந்தரும் சிவமே
செப்பில் அரசரும் சிவமே
தேவாதி தேவரும் சிவமே
இப்புவி யெல்லாம் சிவமே
என்னை யாண்டதும்
சிவமே"

என அவன் அருளாலே அவன் தாள் வணங்கி ... வாழப் பழகிக்கொள்வோமாக.

## ஆண்டு விழா

யாழ்ப்பாணம். திங்கள்

புனிதவளன் விளையாட்டுக் கழக 20-வது ஆண்டுநிறைவு விழா இம்மாதம் 14ம்-திகதி மாலை கழகமுன்றலில் நடைபெற இருக்கிறது. பிரதம நீதவான் பி. ஜி. எஸ். டேவிட்டும் பாரியாரும் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்கள் விளையாட்டில் வெற்றி பெற்ற வீரர்களுக்கு திருமதி. டேவிட் பரிசில்கள் வழங்குவார்.

## வெள்ளையர்......

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

லிம் மொசாம்பிக்கிலும் வியட்நாம்போன்ற கொறில்லா யுத்தங்கள் ஏற்கனவே நடக்கின்றன. தென் ஆபிரிக்காவிலிருந்து ஏராளமான கொறில்லாக்கள் ரொடீசியாவுக்குள் நுழைகின்றனர். வெள்ளைக்கார பிரிட்டனும் வெள்ளைக்கார அமெரிக்காவும் தக்க நடவடிக்கை எடுக்க விட்டால் என்ன நேரும் என்பதை நினைக்க மனம் அஞ்சுகிறது.

வெள்ளையர் - கறுத்தவர் சண்டை இவ்வருடம் அதிகரிக்கப் போகிறது. அமெரிக்காவில் உள்நாட்டு யுத்தமே தோன்றலாம். மனிதகுலம் ஒன்றே என்ற உண்மையை நாம் இன்றும் உணரவில்லை.

(இன்ஸ்பா)

## இன்று பரிசளிப்பு

உடுப்பிட்டி, திங்கள்

...தவியடி மத்திய மகா வித்தியாலய வருடாந்தப் பரிசளிப்பு விழா இன்று நடைபெறும்.

## முடிச்சுமாறிகள் கைவரிசை

உடுப்பிட்டி, ஞாயிறு

கரணவாய் விவசாயி சுன்னாகம் பஸ் நிலையத்தில் தனது பணத்தைத் திருடரிடம் பறிகொடுத்துத் தவித்தார். கரணவாய் தெற்கு சோளங்கனைச் சேர்ந்த திரு. எஸ். கிருஷ்ணமூர்த்தி என்னும் இளம் விவசாயியே முடிச்சு மாறிகளின் கைவரிசைக்கு இலக்கானார்.

கிருஷ்ணமூர்த்தி தனது தோட்டத்தில் உற்பத்தியான கோவாவை இங்கிருந்து சுன்னாகம் சந்தைக்கு கொண்டு சென்று விற்று விட்டுத் தனது ஊர் திரும்புவதற்காகச் சுன்னாகம்-தொண்டமனாறு பஸ்ஸில் ஏறுகையில் ஜனநெரிசலிடையே அவரது பணம் மாயமாய் மறைந்து விட்டதாம். பஸ்ஸில் ஏறிய பின்னரே தனது சோட் பொக்கற்றைப் பார்த்தபொழுது அதில் வைத்திருந்த 77 ரூபாயும், 1 சுவீப் டிக்கெட்டும் திருட்டுப்போய் விட்டதைக் கண்டு திடுக்கிட்டார். பஸ்ஸில் இருந்த பிரயாணிகளைப் பரிசோதித்தும் எவ்வித பயனும் கிடைக்காததால் அவ்விளம் விவசாயி ஏமாற்றத்துடன் வீடு திரும்பினார்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சிரமதானப் பணியில் யாழ். மாவட்டத்தின் வெற்றி

அளவெட்டி, ஞாயிறு

யாழ். மாவட்டத்தில் மற்றைய ஆண்டுகளைவிட சென்ற ஆண்டு இடம் பெற்ற சிரமதான இயக்க வேலைகள் இம் மாவட்ட மனித சக்தியின் தன்னலமற்றமாபெரும் சாதனையை நிலைநாட்டியுள்ளது.

இச் சாதனையால் சென்ற ஆண்டு 409135 ரூபாய் பெறுமதியான 101 அபிவிருத்தித் திட்ட வேலைகள் 169145 ரூபாய் செலவில் 40122 மனிதபலத்தைப் பிரயோகித்து 23 9990 ரூபாய் மிச்சம்பிடிக்கப்பட்டு யாழ். மாவட்டம் வெற்றிபெற்றுள்ளது.

இவ்வாறு யாழ் மாவட்ட கிராமஅபிவிருத்தி மேற்பார்வையாளர் திரு. எஸ். பாலசுந்தரம் வெளியிட்ட சென்ற ஆண்டு நடைபெற்ற சிரமதான வேலைகள் பற்றிய அறிக்கை கூறுகிறது.

மேலும் இவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

சுயநலமின்றி தேசாபிமான சேவையினூடு தாயகம் சிறப்புறமுடியும் என்ற நம்பிக்கை மக்கள் மனதில் பதிந்துவிட்டது. சிறப்பாக யாழ். மாவட்டத்தைச் சேர்ந்தமுல்லியான், செம்பியன்பற்று, முகமாலை, அளவெட்டி, வட்டுக்கோட்டை கிழக்கு, மாரீசன்கூடல், பொலிகண்டி, தொண்டைமானாறு கரவெட்டி மேற்கு, பெருங்காடு, நெடுந்தீவு மத்தியபகுதி, வறணி, இடைக்குறிச்சி, கோப்பாய் வடக்கு, உரும்பிராய், பல்லவராயன் கட்டு, பூராச்சி தணுக்காயின் சில பகுதி கிராமங்களில் சிறப்பான சிரமதான வேலைகள் நடைபெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

இக்கிராமத்தைச் சேர்ந்த மக்கள் நாட்டின் அபிவிருத்தி தமது கைகளில் தான் தங்கியுள்ளது என்பதை நன்கு உணர்ந்து சேவைமூலம் வெளிக்காட்டியுள்ளார்கள்.

மற்றும் பலவேறு நாடுகள் மனித சக்தியை தேசிய திட்டங்களான கட்டாய தொழிற்சேவை, நாட்டின் அபிவிருத்திக்கான இராணுவசேவைப்பிரிவு, தொண்டர்படை முதலியவற்றுக்கும் பாவிக்கப்பட்டுவருகிறது. ஆனால் அனுபவரீதியில் நிபந்தனையற்றதன்னுணர்ச்சியுள்ள தொண்டர் சேவையான சிரமதான வேலையினால் அதிக நன்மையை தேசிய அபிவிருத்திக்கு ஏற்படுத்தலாம் என்று சிறப்பான இவ்வறிக்கை கூறுகிறது.

## 'கிராமங்களை முன்னேற்ற சிரமதானமே சிறந்த வழி'

காரைநகர், ஞாயிறு

"இன்றைய அரசாங்கத்தை எதிர் நோக்கியிருக்கும் பொருளாதார நிலையை முன்னிட்டு, ஒவ்வொரு கிராமத்தையும் சீர்திருத்தம் செய்வதற்கு வேண்டிய நிதியைப் பெற்றுக்கொள்வது சிரமம், எனவே ஒவ்வொரு பகுதி மக்களும் தங்கள் தங்கள் பகுதிகளிலுள்ள சீர்திருத்தங்களையும் ஏனைய அபிவிருத்திகளையும் சிரமதான மூலம் செய்வதே சிறந்த வழியாகும். இச்சிரமதான இயக்கத்தை கிராமப் பகுதி மக்களிடையே புகுத்துவதற்கு கிராம முன்னேற்றச் சங்கங்கள் யாவும் ஒன்றுபட்டு உழைக்க முன்வர வேண்டும்"

இவ்வாறு தீவுப்பகுதி காரியாதிகாரி திரு. விநாயகலிங்கம் திக்கரை கிராம முன்னேற்றச் சங்க ஆதரவில் நடைபெற்ற சிரமதான இயக்கத்தை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

காரைநகர்பாலாவோடை விளையாட்டு மைதானத்தையும், தில்லைச் சுடலை வீதியையும் அமைப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சிரமதான இயக்கத்துக்கு காரைநகர் கிராமசபைத் தலைவர் திரு கா. க. விசுவலிங்கம் தலைமை வகித்தார்.

## பௌர்ணமி தின கலை விழா

யாழ்ப்பாணம், திங்.

யாழ்ப்பாண மாநகரசபை 'பௌர்ணமிதின கலை விழா' யாழ். திறந்த வெளி அரங்கில் எதிர்வரும் சனிக்கிழமை நடைபெறவுள்ளது. புதுவருட சிறப்பு நிகழ்ச்சிகளாக வேலணை முத்தமிழ்க் கலாமன்றம் அளிக்கும் மெல்லிசை- எம். என். ராஜா குழுவினர், வில்லுப் பாட்டு- நகைச்சுவை பணி சபா சதாசிவம் குழுவினர், நாடகம்- 'போடு புள்ளடி' ஆகியன இடம்பெறவிருக்கின்றன.

## இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனம்

திங்கள் 8-4-68

செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00

344 மீற்றர் & 61 மீற்றர்

காலை 6-30 நாதாஞ்சலி 6-35 சைவநற்சிந்தனை, 6-40 கத்தோலிக்கநற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-30 குரல்வகை 8-00 இசைவேளை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

344 மீற்றர் & 49 மீற்றர்

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

344 மீற்றர் & 61 மீற்றர்

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 இளைஞர்மன்றம் — தயாரிப்பு — வானொலி அண்ணா.

இரவு 6-15 பாட்டு லீலாவதி சண்முகதாஸ், 6-45 பாவளம், 7-00 கிராம சஞ்சிகை, 7-30 குங்குமம் — தயாரிப்பு — சற்சொருபவதிநாதன், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 பாட்டு — வி. நடேசன், 10-00 நேயர் விருப்பம்.

## மூவருக்கு சமன்ஸ்

குரும்பசிட்டி, ஞாயிறு

சங்கானை பிரேத ஊர்வல துப்பாக்கிச் சூடு சம்பந்தமான 17 சந்தேக நபர்களில் 14 சந்தேக நபர்கள் மீண்டும் மல்லாகம் நீதிபதி திரு. எம். சண்முகலிங்கம் முன்னிலையில் ஆஜராகினர். கோர்ட்டில் சமுகமளிக்கத் தவறிய மூன்று நபர்கள் மீதும் சமன்ஸ் வழங்க உத்தரவிட்ட நீதிபதி மீண்டும் இவர்களை இம்மாதம் 20-ந் திகதிக்கு நீதிமன்றத்தில் ஆஜராகும்படி உத்தரவிட்டார்.

## காந்தி சேவா சங்கத்தின் அனுதாபம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

டாக்டர் மார்ட்டின் லூதர் கிங்கின் மனைவியாருக்கு இலங்கை காந்தி சேவா சங்கத்தின் அனுதாபத்தைத் தெரிவித்து, ஒரு செய்தியை அமெரிக்க ஸ்தானிகராலயத்தின் மூலம் அனுப்பியுள்ளதாக இச்சங்கத் தலைவர் முதலியார் திரு. சின்னத்தம்பி கூறி மேலும் குறிப்பிடுவதாவது:

இக்கொலையைக் கேட்டு தாங்கமுடியாத கவலை ஏற்பட்டுள்ளது. மகாத்மாவைப் பின்பற்றும், வினோபாபாவே, ஜெயபிரகாஷ் நாராயண்போன்ற ஒரு பெரிய தலைவராக டாக்டர் மார்ட்டின் லூதர் கிங் மதிக்கத்தக்கவர். அவரது மரணம் உலகத்துக்கே ஒரு பெரும் இழப்பாகும். அவரது உயிர்த்தியாகத்தின் விளைவாக, நீக்ரோவர் விடுதலை இயக்கம் வெற்றி பெறுமென்றே நம்புகிறோம். பெரியவர்களின் உயிர்த்தியாகம், எப்போதாவும் வீண்போகாது.

## ஞாபக கூட்டத்தில் கலந்து கொண்டார்

யாழ்ப்பாணம், ஞாயிறு

நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்திற்குவிஜயம் செய்த கம்யூனிஸ்ட் கட்சிப் பிரமுகர்களான திருவாளர்கள் எஸ். டி. பண்டாரநாயக்கா எம். பி. யும், என். சண்முகதாசனும் கொடிகாமத்திற்கு விஜயம் செய்தார்கள்.

அண்மையில் இங்கு துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணமான இரத்தினம் என்பவரின் ஞாபகக் கூட்டம் ஒன்றில் இவர்கள் கலந்து கொண்டனர்.

மந்துவிலில் நடைபெற்ற இக்கூட்டத்தில் மரணமான இரத்தினத்தின் உருவப்படமொன்றும் திரை நீக்கம் செய்யப்பட்டது.

பலாலி விமான நிலையத்திலிருந்து திருவாளர்கள் சண்முகதாசனும், பண்டாரநாயக்காவும் யாழ்ப்பாணத்திற்கு ஊர்வலமாக அழைத்துவரப்படுகையில் புன்னாலைக்கட்டுவன், உரும்பராய், திருநெல்வேலி, ஆரியகுளம் ஆகிய இடங்களில் இவர்களுக்குப் பலத்த வரவேற்பு அளிக்கப்பட்டது இரண்டு நாள் விஜயத்தை முடித்துக்கொண்டு இவர்கள் நேற்று நண்பகல் கொழும்பு திரும்பினார்கள். (கா. நி)

## பண்டர, சண். சுப்ரிண்டனை சந்தித்தனர்

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணத்துக்கு நேற்றுமுன்தினம் விஜயம் செய்த ஹம்பகா எம். பி திரு. எஸ். டி. பண்டாரநாயக்காவும், திரு. என். சண்முகதாசனும் வடபகுதி பொலிஸ் அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கத்தை நேற்றுக் காலை சந்தித்து இங்குள்ள கலவரநிலைபற்றிப் பேச்சுவார்த்தை நடத்தினார்கள்.

வடபகுயில் நிலவும் தீண்டாமையை ஒழிக்கவே தாம் இங்கு விஜயம் செய்வதாகவும், இதனை வளர்ப்பதற்காக தாம் இங்கு வருவதாக சிலர் கூறித்திரிவது தப்பான கருத்தென்றும் இவர்கள் பொலிஸ் அதிபரிடம் தெரிவித்தனர். [கா. நி]

## "எல்லோருக்கும் தேநீர் விற்பதில்லை"

### தேநீர் கடைபிரவேச வழக்கில் சாட்சியம்

குரும்பசிட்டி, ஞாயிறு

சங்கானையைச் சேர்ந்த அந்தனி எட்வேட், எஸ் தம்பிமுத்து ஆகிய இருவரும் கடந்த வருடம் ஆகஸ்ட் மாதம் 6-ந் திகதி பொன்னையா முத்துசாமிப் பிள்ளை என்பவரது தேநீர் கடையில் அத்துமீறிப் பிரவேசித்து பயமுறுத்தியதாக சங்கானைப் பொலிஸாரால் தொடரப்பட்டுள்ள வழக்கு மல்லாகம் மாஜிஸ்திரேட் திரு. எம். சண்முகலிங்கம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

விசாரணையின் போது சாட்சியமளித்த தேநீர் கடை சொந்தக்காரரர் பி. முத்துச்சாமிப்பிள்ளை கூறியதாவது: சம்பவ தினத்தன்று மாலை ஐந்து மணியளவில் சுமார் நாற்பது, ஐம்பது பேர் கூட்டமாக கடைக்கு வெளியே நிற்க காணப்பட்டபோது இரு எதிரிகளும் எனது கடைக்கு உள்ளே வந்தனர். மூன்று பிரிவுகளாக கடை பிரிக்கப்பட்டு ஒரு அறையில் சமையல் வேலைகளும், மற்றய பகுதியில் சாப்பாடு சாமான்கள் வைக்கப்பட்டு அடுத்ததில் சாப்பாடு பரிமாறப்பட்டு வருவதும் வழக்கம். எதிரிகள் சாப்பாடு பரிமாறப்படும் அறைக்குள் எனது உத்தரவு இல்லாது எனக்கு விருப்பமில்லாத வகையில் நுழைந்திருந்தனர். கடையில் நின்ற பிள்ளைகள் குழறிய சத்தம் கேட்டு ஓடிப் போனபோது எதிரிகள் நிற்பதைக் கண்டேன். நான் அவ்விடத்தை விட்டு செல்லுமாறு எதிரிகளைக் கேட்ட போது மறுத்து விட்டனர். பின் பொலிஸ் இன்ஸ்பெக்டர் சம்பவ இடத்திற்கு வந்து எதிரிகளை அழைத்துச் சென்றார்.

எதிரிகள் தரப்பு வழக்கறிஞரின் குறுக்கு விசாரணையின் போது சாட்சி கூறியதாவது: நான் சைவ குலத்தவன். ஆலயத்தின் உள்ளே சென்று பூசை செய்பவர் சைவ குலத்தவராவர். இந்தியாவில் சாதி பாரபட்சம் காட்டப்படுவதில்லை என்பதை அறிவேன். சம்பவநாள் பொலிஸாரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தேநீர் கடை பிரவேச மகாநாட்டில் நானும் கலந்து கொண்டேன். மகாநாட்டில் தேநீர் கடைப் பிரவேசத்திற்கு எதிர்ப்பு தெரிவித்தேன் எனது கடையில் தேநீர் எல்லோருக்கும் விற்பதில்லை.

மேல் விசாரணை இம் மாதம் 20-ம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

எதிரிகள் சார்பில் வழக்கறிஞர் சிவ. ஸ்ரீதரன் ஏற்பட்டிருந்தார். பொலிஸ் தரப்பில் வழக்கறிஞர் ஆர். ஜே. செல்வரத்தினம் ஆஜரானார்.

தொல்புரம் கொலை வழக்கு

## 'கத்தியுடன் ஓடிய எதிரியை பிடிப்பதற்காக துரத்தினேன்'

குரும்பசிட்டி, ஞாயிறு

"காலஞ் சென்றவரை கற்கண்டு என்பவர் தனது கைகளினால் கட்டிப் பிடித்து தாங்கிக் கொண்டிருப்பதைக் கண்டேன். அந்நேரம் கையில் கத்தியுடன் எதிரி சம்பவம் நிகழ்ந்த இடத்திலிருந்து ஒழுங்கை வழியாக ஓடினார். ஓடிச் செல்லுகையில் எதிரி கத்தியை பொன்னையாவிடம் கையளித்து விடு ஓடினார். நான் எதிரியைத் துரத்திச் சென்றபோது பிடிக்க முடியவில்லை. தப்பித்து ஓடிவிடார். பின்னர் சம்பவ இடத்திற்கு திரும்பி வந்த போது காலஞ் சென்றவர் இறந்து கிடந்தார்."

தொல்புரம் கொலை வழக்கு மல்லாகம் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது தமது சாட்சியத்தில் சின்னவன் மாரிமுத்து என்பவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொல்புரம் கொத்தியாலத்தை வாசியான கிருஷ்ணன் பாலசிங்கம்[வயது 22] என்பவரை இவ்வருடம் மார்ச் மாதம் 23-ம் திகதி கொலை செய்ததாக கணபதி இராசையாஎனபவர்மீதுசங்கானைப் பொலிஸார் இவ்வழக்கில் குற்றஞ் சாட்டியுள்ளனர்.

விசாரணையின் போது இறந்தவரை பிரேத பரிசோதனை செய்த மாவட்ட உதவி வைத்திய அதிகாரி டாக்டர் என். பத்மநாதன் எஸ். இராமன், எஸ். வரதராசா, எஸ். இரத்தினம், எம். மகாலிங்கம் ஆகியோரும் சாட்சியமளித்தனர்.

எதிரியை தொடர்ந்து விளக்க மறியலில் வைக்க உத்தரவிட்டு நீதிபதி மேல் விசாரணையை இம்மாதம் 16-ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

### "எல்லாச் சமயமும் வளர வேண்டும்"

அனலைதீவு, ஞாயிறு

"சைவசமயத்தை மட்டும் வளர்த்தால் போதாது. ஒவ்வொருவரது சமயமும் வளர நாம் ஒத்துழைப்பு நல்க வேண்டும். திரு. புண்ணியலிங்கம்ஆசிரியர் சைவத்தை வளர்க்க மிகவும் பாடுபட்டவர். அவரை இங்கிருந்து மாற்றியமை வேதனை அளிக்கிறது."

இவ்வாறு அனலைதீவு சதாசிவ மகாவித்தியாலயத்தில் கடமையாற்றி கோப்பாய்க்கு மாற்றலாகிச் சென்ற திரு சு. புண்ணியலிங்கம் ஆசிரியருக்கு அளிக்கப்பட்ட பிரிவுபசார விழவில் ஆசிரியர் திரு. கதிரவேலு கூறினார்.

பதில் அதிபர் திரு. இ. பொன்னம்பலம் தலைமையில் இவ்விழா நடைபெற்றது.

### புதிய நிர்வாகிகள்

சுழிபுரம், ஞாயிறு

சித்தங்கேணி இளைஞர் முன்னேற்றக்கழக வருடாந்தப் பொதுக் கூட்டம் சங்க வாசிகசாலை மண்டபத்தில் உப தலைவர் அ. ஆதித்தன் தலைமையில் நடைபெற்றது.

நடப்பு வருட நிர்வாகிகளாகப் பின் வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: சி. ஸ்கந்தமயம், உப தலைவர் அ. ஆதித்தன், காரியதரிசி: அ. சொர்ணலிங்கம், உபகாரியதரிசி: த. நாகநாதன். தனாதிகாரி: ந. தவராசா, உப தனாதிகாரி: பா. விஜயகுமார் நூல்நிலையப் பொறுப்பாளர்: சி திருவம்பலமயம் விளையாட்டுக் காரியதரிசி: பூ. சிவபாலன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீவுப்பகுதியில்

# முதலாவது கிளித்தட்டு சுற்றுப் போட்டி

ஊர்காவற்றுறை, ஞாயிறு

புளியங்கூடல் மகாமாரி சனசமூகநிலையத்தினர் திரு. மு செல்லத்துரையின் வெற்றிக்கேடயத்திற்காக நடாத்தும் கிளித்தட்டுச் சுற்றுப் போட்டியில் தீவுப்பகுதிகளிலுள்ள பத்துக் கழகங்கள் பங்கு பற்றுகின்றன.

போட்டிகளில் பங்கு பற்றும் கழகங்களின் விபரம் வருமாறு:

வேலணை சந்திரா விளையாட்டுக்கழகம், கரம்பொன் விளையாட்டுக்கழகம், ஊர்காவற்றுறை றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகம், வேலணை கலைமகள் சனசமூகநிலையம், ஊர்காவற்றுறை ஐக்கிய விளையாட்டுக்கழகம், வேலணை கிழக்கு நேத்தாஜி சனசமூகநிலையம், காரைநகர் விளையாட்டுக்கழகம் புளியங்கூடல் அபிவிருத்திக்கழகம், வேலணை தெற்கு ஐயனார் சனசமூகநிலையம், சரவணை நாவலர் விளையாட்டுக்கழகம்.

புளியங்கூடல் மகாமாரி சனசமூகநிலைய விளையாட்டு மைதானத்தில் இப்போட்டி நடைபெறும். இறுதிப் போட்டிக்கான திகதி பங்கு பற்றும் கழகங்களுக்கு விரைவில் அறிவிக்கப்படும் என கிளித்தட்டுப் போட்டி அமைப்பாளர் திரு. பே. பொன்னுச்சாமி தெரிவித்துள்ளார்.

---

## ரேசஸ் வென்றது

யாழ்ப்பாணம், திங்கள்

இணுவிலில் ஆணைக்கோட்டை யங்ஸ்ராரர் விளையாட்டுக்கழகத்துக்கும் இணுவில் ரேசஸ் ஸ்போட்ஸ் கிளப்புக்குமிடையில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் ரேசஸ் விளையாட்டுக்கழகம் 5 விக்கெட்டாலும் 25 ஓட்டங்களாலும் வெற்றிபெற்றது.

ஃ ஃ ஃ

ரேசஸ் விளையாட்டுக் கழகத்துக்கும் ஏழாலை சபயரி கிரிமேயஷின் கிளப்புக்குமிடையே இணுவிலில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் இணுவில் ரேசஸ் விளையாட்டுக்கழகம் 4 கோல்களால் வெற்றி பெற்றது.

---

## சுடுகாட்டில் சிரமதானம்

உடுவில், ஞாயிறு

சிரமதானப் பணி மூலம் ஒரு சுடலத்தின் ஆஸ்தியை அப்புறப்படுத்தி ஏனைய பிரேதம் ஒன்றை எரிப்பதற்கான வழிவகைகளை செய்வதில் கொக்குவில் சனசமூக நிலையத்தினர் நேற்று முன்தினம் ஈடுபட்டனர்.

கொக்குவில் சனசமூகநிலையத்தினர், மேற்படி நிலையத் தலைவர் திரு. க. இராசாவின் தலைமையின்கீழ் பெரிய அளவிலான சிரமதானப் பணியை செய்து வருகின்றனர்.

பாழடைந்து கிடக்கும் கொக்குவில் சுடலையை புனரமைப்புச் செய்து செப்பனிடும் பணியில் தற்போது ஈடுபட்டிருக்கும் இவர்கள் பிரேதம் எரிக்கும் மைதானத்தை துப்புரவு செய்துள்ளனர்.

---

## தேர்த் திருவிழா

கண்டி, ஞாயிறு

கண்டி கட்டுக்கலை ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலயத் தேர்திருவிழா ஏப்ரல் மாதம் 10-ந் திகதி நடைபெறும்.

## மன்னாரை இணுவில் வென்றது

மன்னார், ஞாயிறு

மன்னார் சென். லூயிஸிஸ் உதைபந்தாட்டக் கோஷ்டிக்கும், இணுவில் இந்து விளையாட்டுக்கழக உதைபந்தாட்டக் கோஷ்டிக்கும் மன்னார் பள்ளிமுனை விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற மோதலில் இணுவில் இந்து விளையாட்டுக்கழகம் 3-2 கோல்களால் வெற்றியீட்டியது.

போட்டி ஆரம்ப முதல் விறுவிறுப்பாக இருந்தது. இணுவில் முன்னணி வீரர்கள் அடுத்தடுத்து மூன்று கோல்களையும் போட்டனர். இணுவில் கோஷ்டியின் காப்டன் இ எஸ். இலகுநாதன் அபாரமாக விளையாடினார்.

---

வேலணை

## கலைமகள் வெற்றி

ஊர்காவற்றுறை, ஞாயிறு

புளியங்கூடல் மகாமாரி சனசமூக நிலையம் செல்லத்துரை ஞாபகார்த்த வெற்றிக் கேடயத்துக்காக நடாத்தும் கிளித்தட்டுப் போட்டியில், வேலணை கலைமகள் சனசமூக நிலையமும், ஊர்காவற்றுறை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தினரும் கலந்து கொண்டனர். இப் போட்டியில் வேலணை சனசமூக நிலையம் வெற்றிபெற்றது.

---

## வாலிபர் கழக புதிய நிர்வாகிகள்

காங்கேசன்துறை, ஞாயிறு

தெல்லிப்பழை முற்போக்கு ஐக்கிய வாலிபர் கழகத்தினரின் புதிய வருட நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்:-

தலைவர்:- திரு. க. இராஜரத்தினம். உப தலைவர்:- திரு. அ சிவஞானசுந்தரம், காரியதரிசி:- திரு. ச. கிருஷ்ணமூர்த்தி. உப காரியதரிசி:- திரு. இ. வேலாயுதம். தனாதிகாரி:-திரு.பொ சந்திரசேகரம். உப தனாதிகாரி:- திரு நா. இராஜரத்தினம். போஷகர்:- திரு. வே. முருகையா. இலவச இராப் பாடசாலை மேற்பார்வையாளர்:- நா. பாலசிங்கம். கழக ஆலோசகர்கள்:- திரு. கே வி என். புலேந்திரன் தலைமையில் ஒன்பது பேர் தெரிவு செய்யப்பட்டனர்.

---

## வேலை நிறுத்தம்

அனுராதபுரம், ஞாயிறு

அனுராதபுர பாதுகாப்புச் சபையில் வேலை செய்யும் பல ஊழியர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருப்பதால் பொது மக்கள் தமது அலுவல்களைச் செய்து முடிக்க இயலாதிருப்பதாகத் தெரிய வருகிறது.

இந்த வேலை நிறுத்தம் மற்றும் ஸ்தாபனங்களுக்கும் பரவுமோ எனச் சந்தேகிக்கப்படுகிறது. வேலை நிறுத்தத்தை ஒரு முடிவுக்குக் கொண்டு வருவதில் பாதுகாப்புச் சபைத்தலைவர் முயற்சிமேற்கொண்டுள்ளார்.

## மகேஸ்வர பூஜை

யாழ்ப்பாணம், திங்கள்

நயினங்குண்டு பெரிய தம்பிரான் கோவிலில் நேற்று முன்தினம் பகல் விசேஷ பூஜையுடன் மகேஸ்வர பூஜையும் நடைபெற்றது. திரு. தா. பொன்னம்பலம் ஆசிரியரால் "தம்பிரான் தோழர்" என்னும் பொருள் பற்றி கதாப்பிரசங்கமும் நடாத்தப்பட்டது.

## சிறுவன் யார்?

வவுனியா, ஞாயிறு

மாங்குளத்தில் அனாதையாக அலைந்துதிரிந்த 9 வயதுடைய சிறுவன், வவுனியாப் பொலிஸாருக்குப் பெருத்த தலையிடியைக் கொடுத்துக் கொண்டிருக்கிறான். இரு தினங்களுக்கு முன் மாங்குளத்திலிருந்து வவுனியாவை நோக்கிவந்து கொண்டிருந்த கார் ஒன்றை மறித்து ஏறிய இச் சிறுவன் வவுனியாப் பொலிஸில் தனது பெயர் என். முத்தையா என்றும், வயது 9 என்றும் கூறியுள்ளான்.

அவன் வவுனியாப் பொலிஸாருக்கு அளித்த வாக்குமூலத்தில் தான், மாவனல்ல என்னும் இடத்திலிருந்து, தமது மைத்துனருடன் மாங்குளத்தில் வேலை செய்ததாகவும், அவர் தனது சம்பளத்தை எடுத்துக்கொண்டு போய்விட்டாரென்றும் கூறினான்.

சிறுவனை வவுனியாப் பொலிஸில் பாதுகாப்பாக வைத்துள்ளனர்.

---

## ரயில் நிலையத்தில் இரு நேரங்கள்

கண்டி, ஞாயிறு

கண்டி ரயில் நிலையத்தில் உள்ள மணிக்கூடு ஒரே நேரத்தில்இருவகையான நேரங்களை காட்டுகின்றன. இதனால் தூரப் பயணங்களை மேற்கொள்ளும் ரயில் பிரயாணிகள் ரயிலை விட்டு மறு ரயிலுக்காக பல மணித்தியாலங்கள்காத்துநிற்கவேண்டிய நிலை ஏற்படுகிறது.

வாரத்தின் முதல் நாளாகிய இன்று காலை 6-50 மணிக்கு கொழும்பு நோக்கிப் புறப்படும் ரயில் 6-46 மணிக்கே புறப்பட்டதால், இவ்ரயிலை தவறவிட்ட சுமார் 30 பிரயாணிகள் 9-45 மணி ரயிலுக்காகக் காத்து இருக்கவேண்டிய நிலை ஏற்பட்டது.

---

## கூப்பன்கள் யாருடையது?

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தில் இரண்டு கூப்பன்கள் மாக்கிறெற் என்பவரால் கண்டெடுக்கப்பட்டு 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் பெற்றுக்கொள்ளலாம்.

---

## 'தேர்தல்கால மனக்கசப்புக்களை மறந்துவிடுங்கள்'

புன்னாலைக்கட்டுவன், ஞாயிறு

'இப்பட்டினசபைஅறவிடும் வரிகள் இதன் எல்லைக்குட்பட்ட வரியிறுப்பாளருக்கே செலவிடப்படும் தேர்தல் கால மனக்கசப்புகளை மறந்து நாட்டின் அபிவிருத்திக்கும் முன்னேற்றத்துக்குமாக ஒன்றுதிரண்டு உழைக்கவேண்டியது ஜனநாயகத் தத்துவத்தில் நம்பிக்கை கொண்டவர்களின் கடனாகும்.'

இவ்வாறு உரும்பராய்ப் பட்டினசபைத்தலைவர் திரு. க. பத்மராசா வரியிறுப்பாளருக்கு விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் கூறியுள்ளார்.

---

## கூட்டம் ஒத்தி வைப்பு

யாழ்ப்பாணம், ஞாயிறு

தமிழ்காங்கிரஸ் வாலிப முன்னணி பொதுச் சபைக் கூட்டம் இம் மாதம் 15ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இக் கூட்டம் இம்மாதம் [illegible] முன்பு அறிவிக்கப் பட்டிருந்தது.

# ஆசிரியரது கோரிக்கைகள் நிறைவேருதது ஏன்?

## செனட்டர் கூறும் காரணம்

அளவெட்டி, ஞாயிறு

"இந்நாட்டு ஆசிரியர்களுக்கிடையே பிரிவு மனப்பான்மை நிலவுவதால்தான் அவர்களின் கோரிக்கைகள் நிறைவேருது தடைப்படுகிறது. ஆசிரியர்களின் மத்தியில் ஏற்பட்டுள்ள அபிப்பிராயபேதங்களையும், பிரிவு மனப்பான்மையையும் நீக்கினால்தான் நல்ல ஆசிரிய சமுதாயம் உருவாகும். எனவே தன்னலமற்றசேவையில் ஈடுபட்டு நாட்டின் கல்வி வளர்ச்சிக்கு உதவ வேண்டும்.

இவ்வாறு செனட்டர் சு. நடராசா வலி-வடக்கு தமிழாசிரியர் சங்கத்தின் ஆதரவில் நடைபெற்ற ஒரு. பிரிவுபசாரக்கூட்டத்தில் கூறினார்.

மல்லாகம் அமெரிக்கன் மிஷன் பாடசாலை மண்டபத்தில் காங்கேசன்துறை வட்டார வித்தியாதரிசியாக கடமையாற்றி கோப்பாய் வட்டாரத்துக்கு இடமாற்றமாகச் செல்லும் திரு. வே. சண்முகநாதனுக்கு வலி-வடக்குத் தமிழாசிரியர் சங்கத்தினரால் நடாத்தப்பட்ட பிரிவுபசார விழாவுக்கு சங்கத் தலைவர் திரு. வ. கந்தையா தலைமை வகித்தார்.

தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி இசை ஆசிரியை செல்வி நாகம்மா வாழ்த்துப்பா வாசித்தார். புதிய வித்தியாதரிசியாக நியமிக்கப்பட்ட திரு. ஜே சீமான் பிள்ளைக்கும் வரவேற்பளிக்கப்பட்டது.

செனட்டர் நடராஜா மேலும் கூறியதாவது: பாடசாலைகளை அரசாங்கம் சுவீகரித்தும் மாணவர்களுக்கு பாடசாலைகளில் இடநெருக்கடி ஏற்பட்டுள்ளது. இக் குறையைத் தீர்ப்பதற்கு பாடசாலைகளை விஸ்தீரணம் செய்யவோ, புதிய கட்டிடங்களை அமைக்கவோ அரசாங்கத்திடம் போதிய பணவசதி இல்லாது கஷ்டமுறுகிறது. தற்பொழுது பாடசாலைகளின் கஷ்டங்களைப் போக்க 38க் கோடி ரூபாய் செலவிடவேண்டியிருக்கிறது. இன்னும் சில காலங்களில் இத்தொகை 48க்கோடியாக உயருமென நம்புகிறேன்.

கீரிமலை நகுலேஸ்வரா வித்தியாலய அதிபர் திரு. வ. கந்தையா தமது தலைமையுரையில், திரு. சண்முகநாதனின் சேவையைப் பாராட்டிப் பேசினர்.

அளவெட்டி அருணோதயாக்கல்லூரி அதிபர் திரு. சு. சிவசுப்பிரமணியம், திரு. வி. கந்தையா, அகில இலங்கை தமிழ் ஆசிரியர் சங்கக்காரியதரிசி திரு. குமாரசாமி, இளவாலை மெய்கண்டான் பாடசாலை அதிபர் திரு நவரத்தினம், ஆ. சின்னத்தம்பி, இளவாலை ஹேமன்கத்தோலிக்க பாடசாலை அதிபர் திரு. அடைக்கலமுத்து உட்பட மற்றும் பலரும் உரையாற்றினர்.

---

## காலிக்கு புதிய அரசாங்க அதிபர்

காலி, ஞாயிறு

காலி மேலதிக அரசாங்க அதிபராகக் கடமையாற்றி வந்த திரு. பி ஓ. வி. குணசிங்கா காலியின் அரசாங்க அதிபராகப் பதவியேற்றுள்ளார். அரசாங்க அதிபராகக் கடமையாற்றிவந்ததிரு. டி. எம். ஏ, ஸ்பெல்ட்வின் ஓய்வு பெற்றதையடுத்தே திரு. குணசிங்கா இப்பதவியை ஏற்றுள்ளார். திரு. ஸ்பெல்ட்வின் முதலாளிகள் சம்மேளனத்தில் பதவியேற்பதற்காக ஓய்வு பெற்றுள்ளார். காலியின் மேலதிக அரசாங்க அதிபராக திரு. நந்தா அபயவிக்கிரமா பதவியேற்றுள்ளார்.

புதிய அரசாங்க அதிபரும் மேலதிக அரசாங்கஅதிபரும் தமது பதவிகளை ஏற்பதற்கு முன் காலியிலுள்ள ஸ்ரீ சுதர்மலாய ஆலயத்திற்கு சென்று வழிபாடு செய்தனர்.

# நகர மக்கள் வாரம் கட்டுரை, கவிதை போட்டி

## 'ஈழநாடு' அளிக்கும் வாய்ப்பு

யாழ்ப்பாண நகரில் வாழும் மக்களுக்கு, தங்கள் நகரின் சிறப்பிலும் அதன் முன்னேற்றத்திலும் ஆர்வமும், அக்கறையும் ஏற்படுத்தும் நோக்கத்துடன் அடுத்த மாத முற்பகுதியில் 'நகர மக்கள் வாரம்' கொண்டாடப்பெறவிருக்கிறது. இவ் வாரத்தையொட்டி 'ஈழநாடு' கட்டுரை, கவிதைப் பொட்டியொன்றை ஒழுங்குசெய்துள்ளது.

### 'அழகு வாய்ந்த யாழ். நகர்'

இதுதான் கட்டுரை, கவிதைப் போட்டியின் தலைப்பு. இப்போட்டி மூன்று பிரிவாகப் பிரிக்கப்பட்டுள்ளது. 14 வயதுக்குட்பட்டவர்கள் 300 முதல் 500 சொற்கள்வரை அடங்கியதாக கட்டுரை எழுதவேண்டும். 19 வயதுக்குட்பட்டவர் 500 முதல் 750 சொற்கள்வரை அடங்கியதாக கட்டுரையை அமைத்துக்கொள்ளவேண்டும்.

வயதுக் கட்டுப்பாடு எதுவும் இல்லாத பொதுப் போட்டியில் கலந்துகொள்பவர்கள் தங்கள் கட்டுரையை 750 சொற்களிலிருந்து 1000 சொற்களுக்குள் அடக்கிக்கொள்ளவேண்டும்.

கவிதைப் போட்டியில் கலந்துகொள்பவர்களும் இயன்றவரை சிறிய கவிதைகளையே இயற்றுவது விரும்பத்தக்கது.

இப்போட்டி சம்பந்தமான இதர விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

கட்டுரை, கவிதைகளை 'நகர மக்கள் வாரப் போட்டி,' ஆசிரியர், ஈழநாடு, த. பெ. எண்:49, யாழ்ப்பாணம் என்ற விலாசத்துக்கு அனுப்ப வேண்டும்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# 'நீதியுள்ள அரசெனில் ஆதரவு தரத்தயங்கேன்

## தமிழக அரசு பற்றிக் காமராஜர்

சென்னை, ஏப்ரல் 7

இப்போது ஆட்சியிலிருக்கும் தமிழக அரசாங்கம், நீதியையும் நேர்மையையும் அடிப்படையாகக் கொண்டிருந்ததானால், யார் எதிர்த்தாலும், அதற்குத் தாம் தமது பூரண ஆதரவை அளிக்க முன்வரத் தயங்க மாட்டாரென முன்னாள் காங்கிரஸ் தலைவர் திரு. காமராஜ், தேசிய மாணவர் அபிவிருத்திக் கழகத்தின் செங்கற்பட்டு மாவட்டக் கிளையின் மாநாட்டில் பேசுகையில் கூறினார்.

அண்மையில் சென்னை நகரில் நடைபெற்ற மாணவர்-அரசாங்கப போக்குவரத்து ஊழியர்க்கிடையேயான கைகலப்புப் பற்றிய நீதி விசாரணையில், மாணவர்கள் சாட்சியமளிக்கப் போதிய வசதிகளைச் செய்து தரத் தமிழக அரசு முன்வரவேண்டுமென திரு. காமராஜ் கேட்டுக்கொண்டார்.

# நல்லூர் கிராமசபை தேர்தல் முடிவு

யாழ்ப்பாணம், திங்கள்

நேற்று நடைபெற்ற நல்லூர் கிராமசபைத் தேர்தலில் வெற்றிபெற்றவர்கள் விபரம் பின்வருமாறு:-

1-ம் வட்டாரம்; இ. கனகலிங்கம், 2-ம் வட்டாரம்: இ. சிதம்பரநாதன், 3-ம் வட்டாரம்: ந. தில்லைவிநாயகம், 4-ம் வட்டாரம்: கி. துரைசிங்கம், 5-ம் வட்டாரம்: க. அப்புத்துரை (போட்டியின்றித் தெரிவு) 6-ம் வட்டாரம் பொ. குமாரகுலசிங்கம் [போட்டியின்றித் தெரிவு], 7-ம் வட்டாரம்: எஸ். சிவரத்தினம், 8-ம் வட்டாரம்: இ. வேலாயுதம் 9-ம் வட்டாரம் த. துரைமணி, 10-ம் வட்டாரம்: கே.எஸ். செல்லத்துரை, 11-ம் வட்டாரம்: த.கந்தையா, 12-ம் வட்டாரம்: த. அருளம்பலம்.

10 வட்டாரங்களில் நடைபெற்ற இப்போட்டியில் மொத்தம் 6 பேர் கட்டுப் பணம் இழந்தனர். 4-ம் வட்டாரத்தில் போட்டியிட்ட ஒருவர் ஒரு வாக்கும் பெருததும் இதே வட்டாரத்தில் போட்டியிட்ட மற்றொருவர் ஒரு வாக்கு மட்டுமபெற்றதும் குறிப்பிடத்தக்கது. [கா. நி]

# இ. போ. ச. பற்றி எம்.பி.க்கள் புகார்

## கவனிப்பதாக பிரதமர் உறுதி

கொழும்பு ஞாயிறு

அரசாங்கக் கட்சி பார்லிமென்ட் குழுகூட்டம் இன்று நடைபெற்றபொழுது பல அங்கத்தவர்கள் இ-போ.ச. நிர்வாகம் குறித்து ஆட்சேபங்கள் தெரிவித்தனர்.

மந்திரிசபையில் ஓர் அங்கத்தவராக இருக்கும் சி.பி.டி. சில்வாவின் உறவினராக இருக்கும் திரு ஆர். சி. டி. சில்வா இ.போ.ச. அதிபராகவிருக்கிறார் என்றும் இந்தச் சபையின் நிர்வாகம் மோசமாக இருக்கிறது என்றும் பலர் கண்டித்தனர்.

இதர விஷயமாகத் தாம் ஆராய்ந்து விரைவில் இ. போ.சபையைச் சீர்திருத்துவதாக பிரதமர் வாக்குறுதியளித்தார்.

# செல்வச் சந்நிதி ஆலயப் பிரவேச வழக்கு:

# சுப்ரீம்கோர்ட் தீர்ப்பு எதிரிகளுக்குத் தெரிவிக்கப்பட்டது

## பிரிவு கவுன்சிலுக்கு அப்பீல் செய்ய முயற்சி?

வல்வெட்டித்துறை ஞாயிறு

தொண்டமனாறு செல்வச் சந்நிதி ஆலயத்தில் ஒருவரை வழிபட விடாது தடுத்ததாக தொடரப்பட்ட வழக்கில் பருத்தித்துறை நீதிமன்றத்தில் வழங்கப்பட்ட தீர்ப்பு கொழும்பு அப்பீல் நீதிமன்றம் ஊர்ஜிதப்படுத்தியிருப்பதை இன்று பருத்தித்துறை நீதிமன்றத்தில் ஆஜரான எதிரிகளுக்கு மாஜிஸ்திரேட் தெரிவித்தார்.

தொண்டமானாறு செல்வச் சந்நிதி ஆலயத்திற்குள் கடந்தவருடம் பெப்ரவரி மாதம் 17-ம் திகதி வழிபடச் சென்ற செட்டியூதைச் சேர்ந்த சிறுபான்மை சமூகத்தைச் சேர்ந்தவரான முருகன் இலக்குணன் என்பவரை வழிபடவிடாது தடுத்த தொண்டமனாற்றைச் சேர்ந்த க. தங்கவேலுஐயர் க. சிவசுப்பிரமணியஐயர் ஆகிய இருவர்மீதும் குற்றம் சாட்டி தொடரப்பட்ட வழக்கு பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராசா முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டபோது எதிரிகள் இருவரையும் குற்றவாளிகளாகக் கண்டு தலா ரூபா.100 அபராதம் அல்லது ஒருமாத சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பளிக்கப் பட்டிருந்தது

இத் தீர்ப்பை எதிர்த்து கொழும்பு அப்பீல் உயர் நீதிமன்றத்துக்கு இவர்கள் விண்ணப்பம் செய்திருந்தனர். உயர்நீதிமன்றமும் இத் தீர்ப்பையே ஊர்ஜிதம்செய்திருப்பதாக இன்று பருத்தித்துறை மாஜிஸ்திரேட் முன்னிலையில் ஆஜராகிய எதிரிகள் இருவருக்கும் தெரிவிக்கப்பட்டது.

எதிரிகள் இருவரும் தனித் தனியாக பிரிவுக் கவுன்சிலுக்கு அப்பீல் செய்வார்களெனத் தெரியவருகிறது.

# இன்று சப்பரத் திருவிழா

வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் தேவஸ்தானத்தில் 16-ம் திருவிழாவாகிய (சப்பரத் திருவிழா) இன்று மாலை 6 மணிமுதல் இரவு 7-30 மணிவரை நல்லை ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகளின் சம்பூர்ண இராமாயணக் கதாப் பிரசங்கத் தொடரில் 'நாக பாசம்' என்னும் பொருள் பற்றிய கதாப்பிரசங்கமும் பின்னர் இரவு 7-30 மணிக்கு வசந்தமண்டப பூஜையும் பின்னர்சுவாமிஇடபவாகனத்தில் சப்பரத்தில் எழுந்தருளி வெளிவீதிவலம் வருதலும் இரவு 10 மணிக்கு அர்த்த ஜாமப் பூஜையும் நடைபெறும்.

# கலவரம்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

பெரிய அளவில் கலவரங்கள் இன்று நடைபெறவில்லை.

இன்று நாடு முழுவதும் துக்கதினம் அனுஷ்டிக்கப்பட்டது.

**பாப்பாண்டவர்**

இன்று ரோமிலிருந்து பாப்பாண்டவர்விடுத்த ஒரு அறிக்கையில் மாட்டின் லூதர்கிங் கொலைப்பட்டது படுபாதகமான செயல் என்று கண்டித்தார். அமைதிக்காக அவர் தமது உயிரைத் தியாகம் செய்துள்ளார் என்று பாப்பாண்டவர் தெரிவித்துள்ளார்.

# இன்று

யாழ்ப்பாணம், திங்கள்

புங்குடுதீவு மேற்கு வீரகத்தி விநாயகர் ஆலய 4-ம் திருவிழாவாகிய இன்றுகாலை அபிசேகஆராதனையும் இரவு விசேஷ மேளக் கச்சேரியும் திருப்பூங்குடி ஆறுமுகம் கோஷ்டியினரின் 'வள்ளி திருமணம்' வில்லுப்பாட்டும் நடைபெறும்.

# தலைமை ஆசிரியர் இடமாற்றம்

ஊர்காவற்றுறை, ஞாயிறு

சரவணை நாகேஸ்வரி வித்தியாசாலையில் தலைமை ஆசிரியராகக் கடமையாற்றிய பண்டிதர் திரு. அ. பொன்னுத்துரை வேலணை சரஸ்வதி வித்தியாசாலைக்கும். வேலணை ஆத்திசூடி வித்தியாசாலையின் தலைமை ஆசிரியரான வித்துவான் இ. பொன்னையா சரவணை நாகேஸ்வரி வித்தியா சாலைக்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

# மூவர் றிமாண்டில்

வல்வெட்டித்துறை, ஞாயிறு

பருத்தித்துறை விநாயகம் முதலியார் தெருவில் கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் வி. கமலநாதன், பி. தங்கராசா வி. குலவீரசிங்கம் ஆகிய மூவரையும் துப்பாக்கியால் சுட்டுக் காயம் உண்டுபண்ணியதாக அதே இடத்தைச் சேர்ந்த ஏ. முருகுப்பிள்ளை, மு. ஐயாமுத்து மு. சிறிபதி, மு. ஜெயலட்சுமி ஆகிய நால்வரையும் பருத்தித்துறைப் பொலிசார் கைதுசெய்து பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராசா முன்னிலையில் ஆஜர் செய்தபோது மாஜிஸ்திரேட் எதிரிகளான முருகுப்பிள்ளை, ஐயாமுத்து, சிறிபதி ஆகிய மூவரையும் றிமாண்டில் வைக்கும்படியும் ஜெயலட்சுமி என்ற பெண்ணை ரூபா 1000 பிணையில்செல்லுமாறும் உத்தரவிட்டு வேறொரு திகதிக்கு கோர்ட்டில் ஆஜராகும்படியும் கட்டளையிட்டார்.

# மயிலிட்டி குருநகர் மீனவர் பிரச்னை

## தனிநபர் கமிஷன் விசாரணை நடக்கிறது

காங்கேசன்துறை, ஞாயிறு

மயிலிட்டி- குருநகர் மீனவர்கள் பிரச்னைபற்றி கைத்தொழில் அமைச்சினால் நியமிக்கப்பட்ட தனிநபர் கமிஷனரான திரு. எஸ். கிருஷ்ணதாசன் முன்னிலையில் இன்று காலை 9 மணிக்கு காங்கேசன்துறை பட்டின சபை மண்டபத்தில் சாட்சியங்கள் பதிவுசெய்யப்பட்டன. தொடர்ந்து நாளைய தினமும் நாளை மறு தினமும் மயிலிட்டி, குருநகர் மீனவர்கள் சாட்சியமளிப்பார்கள்.

இன்று குருநகர் மீனவர்கள் சார்பில் அட்வக்கேட் திரு. சுந்தரலிங்கம் வழக்கறிஞர் திரு. அன்ரனியின் உதவியுடன் வாதாடினார்.

திரு. சுந்தரலிங்கம் கமிஷன் முன்னிலையில் சாட்சியமளிக்கையில், 'குருநகர் மீனவர்கள் மயிலிட்டிக் கரையை தளமாக வைப்பதைத்தான் மறுக்கிறார்கள். ஆழ்கடல்சென்று குருநகர் மீனவர்கள் மீன் பிடிப்பதை எதிர்க்கவில்லை' என்றார்.

மயிலிட்டி மீனவர்கள் சார்பில் திரு எஸ் இரத்தினசாமி வாதாடினார். இவர் வாதாடியபொழுது கமிஷன் முன்னிலையில் தெரிவித்ததாவது:- இயந்திரப்படகு வர முன்பும் மயிலிட்டி மீனவர்கள் ஆழ்கடலில் கட்டுமரத்தில் சென்று மீன்பிடித்து வந்தனர். ஆனால் வேறு இடங்களில் உள்ள மீனவர்கள் இயந்திரப்படகு வந்த பின்னரே ஆழ்கடலுக்கு சென்றனர். வாடைக்காற்றுக் காலத்தில் நெடுந்திவு நயினாதிவு, கச்சதீவு அனலைதீவு ஆகிய இடங்களில் மயிலிட்டி மீனவர்கள் தொழில் செய்துவருகிறார்கள். 100 வருடங்களுக்கு முன்னரே தீவுப் குதிகளில் வசன்தோண்டியுள்வார்கள். பருத்தித்துறையில் தற்பொழுது மயிலிட்டி மீனவர்கள் வலைகளை வெய்யிலில் போட இடம் போதாததால் 3 மைல் அப்பால் உள்ள வளலாய்த்துறையில் சென்று வலை போட்டுவருகின்றனர் என்றார்.

தொடர்ந்து பொமக்களின் சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்டுவருகிறது.

# பிரதமருடன்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ரிப்பதற்கு நிபந்தனைகள் தெரிவித்திருப்பதாக தெரிகிறது என்றும் பௌத்த மதத்துக்கும் சிங்கள மொழிச்சட்டத்துக்கும் முக்கியத்தவம் அளிக்கப்பட வேண்டுமென்று அவர்கள் கேட்டதாக அறிவதாகவும் திரு. இலங்கரத்ன தெரிவித்தார்.

பிரதமருடன் அவர்கள் நடத்தியுள்ளமாவட்டசபை மசோதவும் இடம்பெற்றிருப்பதாக அறிவதாக அவர் தெரிவித்தார்.

கூட்டத்தில் திரு. ஆர். ஜி. சேனநாயகா பிரசன்னமாய் இருக்கவில்லை.

பல அங்கத்தவர்கள் திரு. ஆர். ஜி. சேனநாயகாவின் நடவடிக்கை குறித்து கண்டனம் தெரிவித்தனர்.

திருமதி பண்டாரநாயகா பதிலளிக்கும்போது மிக விரைவில் தாம் ஒரு முடிவுக்கு வர இருப்பதாகவும் தாம் எடுக்கும் நடவடிக்கை பற்றி பகிரங்கமாக அறிவிப்பதாகவும் தெரிவித்தார்

# வியட்னும்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

றும், குண்டுவீச்சை ஓரளவு நிறுத்த ஜனதிபதி ஜோன்சன் முடிவு செய்திருப்பதும், பேச்சுவார்த்தைகள் நடத்த வடவியட்னும் இணங்கியிருப்பதும் இறுதியில் வியட்னுமில் அமைதி ஏற்பட வழிவகுக்கும் என்றும் பிரதமர் நம்பிக்கை தெரிவித்தார்.

# 36 சேலைகள் பிடிபட்டன

வல்வெட்டித்துறை, ஞாயிறு

வல்வெட்டித்துறைப் பொலிசாருக்குக் கிடைத்த இரகசிய தகவலைத் தொடர்ந்து சப் இன்ஸ்பெக்டர் திரு. ஆர். வியனகே தலைமையில் சென்ற பொலிஸ் கோஷ்டியொன்று வல்வெட்டித் துறையிலுள்ள ஒரு வீட்டை சந்தேகத்தின் பேரில் சோதனையிட்ட போது 36 இந்திய சேலைகள் இருக்கக் கண்டுபிடிக்கப்பட்டன. கண்டுபிடிக்கப்பட்ட சேலைகளை பறிமுதல் செய்து சந்தேகத்தின்பேரில் அவ் வீட்டிலுள்ள நபர் ஒருவரையும் கைது செய்துள்ளனர். பொருட்களும் நபரும் சுங்க இலாகாவிடம் ஒப்படைக்கப்பட்டு விசாரணை நடைபெற்று வருகிறது.

# இளைஞர் சரண்புகுந்தார்

வல்வெட்டித்துறை, ஞாயிறு

உடுப்பிட்டிச் சந்தியில் உள்ள பொன்னையா மயில்வாகனம் என்பவருடைய சைக்கிள் கடையில் கடந்த புதன்கிழமை இரவு ரூபா 125 களவுபோனது சம்பந்தமாக நல்லையா லோகநாதன் என்ற இளைஞர் வல்வெட்டித்துறைப் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளார்.

தொளஸ்பாகை தொதுறவ தோட்டத்தை சேர்ந்த இந்த இளைஞர் உடுப்பிட்டியிலுள்ள ஆசிரியர் ஒருவர் வீட்டில் வேலைசெய்து வந்தவராம்.

# 6 தினங்கள் நடுக் கடலில் தத்தளித்தனர்

தாளையடி, ஞாயிறு

திருக்கோணமலையிலிருந்து யந்திரப் படகில் மீன்பிடிக்கச் சென்ற 3 வாலிபர்கள் 6 நாட்கள், கரைசேராமல் நடுக்கடலில் தத்தளித்த பின்னர் நேற்று தாளையடிக்கு வந்து சேர்ந்தனர்.

நடுக்கடலில், யந்திரம் பழுதடைந்து விட்டதால், 'பாடும் மீன்' என்ற இவர்களின் படகை தாளையடியைச் சேர்ந்த வ. சூசைப்பிள்ளை என்பவரின் யந்திரப் படகு கட்டி இழுத்து வந்தது.

செ. சண்முகநாதன் [வயது 24], சு. வேலாயுதம் [வயது 16] சி தர்மராசா [வயது 17] ஆகிய மூவருமே நான்கு நாட்களாக தண்ணீர் கூட குடிக்க வழியின்றி கஷ்டப்பட்டு கரை சேர்ந்தவர்களாவர். இம் மாதம் 1-ம் திகதி திருக்கோணமலையிலிருந்து புறப்பட்ட இவர்கள், நேற்று மாலை தாளையடியை வந்தடைந்தார்கள்.

இப்படகில் வந்த செ.சண்முகநாதன் நமது நிருபரிடம் கூறியதாவது: நங்கள் எல்லோரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். நாங் புறப்பட்ட மறுதினம் வ ந்

[5-ம் பக்கம் பார்க்க]

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1968-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 8-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org